இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம்: 10.8.1942 – முரசு: 82 – ஒலி: 34 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆவணி 26 – செவ்வாய்க்கிழமை 12 செப்டம்பர் 2023 – திருச்சி ★ ★ 8 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 82 - Issue 34: Thiruvalluvar Year - 2054 - Aavani 26 - Tuesday 12 September 2023 - Trichy ★★ 8 Pages ₹5.00

## அறநிலையத்துறை சார்பில் 1000 ஆவது குடமுழுக்கு விழா: தமிழ்நாட்டில் நடைபெறும் திராவிட மாடல் ஆட்சி-

# இறை நம்பிக்கையாளர் போற்றும் இணையற்ற ஆட்சி!



கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், நேற்று, ஒடுக்கப்பட்டோரின் விடுதலைக்காகப் போராடிய தியாகி இமானுவேல் சேகரனார் அவர்களின் நினைவு நாளையொட்டி இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடியில் உள்ள அவரது நினைவிடத்தில் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார். இதில் அமைச்சர்கள் கே.ஆர்.பெரியகருப்பன், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.மூர்த்தி, கயல்விழி செல்வராஜ், மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. உள்ளிட்ட கழகத்தினர் திரளாகப் பங்கேற்று மரியாதை செலுத்தினர்.

## முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் - பாராட்டு!

**சென்னை, செப். 12 -**

**சென்னை - மேற்கு மாம்பலம் காசி விசுவநாதர் கோயிலில் கழக அரசின் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் நடைபெற்ற 1000-ஆவது குட முழுக்கு விழாவையொட்டி முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலை தளப் பதிவில், இரண்டாண்டு கால கழக ஆட்சியில் அறநிலையத் துறை சார்பில் 1000-ஆவது குடமுழுக்கு விழா நிகழ்த்தியிருப்பதின் மூலம் இறை நம்பிக்கையாளர் உள்ளிட்ட அனைவரும் போற்றும் ஆட்சியாக திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது என பெருமிதத்துடன் குறிப்பிட்டதுடன், இதற்குக் காரணமான இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, அதிகாரிகள், அலுவலர்கள் அனைவரையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.**

இதுகுறித்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

“எல்லார்க்கும் எல்லாம்” என்ற திராவிட மாடல் ஆட்சியில் அனைத்துத் துறைகளும் அதிவேகமாக வளர்ந்து வருகிறது.

குறிப்பாக இந்து சமய அறநிலையத்துறையின் செயல்பாடுகள் அனைத்திலும் சிறப்பாக இருக்கின்றன.

**ரூ.5000 கோடி சொத்துகள் மீட்பு!**

5000 கோடி ரூபாய் மதிப்பிலான கோயில் சொத்துகளை இரண்டு ஆண்டு காலத்தில் மீட்டது தி.மு.க. அரசு.

இன்றைய நாள்,

1000ஆவது கோயில் குடமுழுக்கு விழாவை மேற்கு மாம்பலம் காசி விசுவநாதர் கோயிலில் நிகழ்த்தியிருக்கிறது இந்து சமய அறநிலையத் துறை.

இறை நம்பிக்கையாளர் அனைவரும் போற்றும் இணையற்ற ஆட்சியாக தி.மு.க. அரசு செயல்பட்டுவருகிறது.

**அமைச்சர் பி.கே.சேகர்பாபுக்கு பாராட்டு!**

இதற்குக் காரணமான இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு அவர்களையும் – அதிகாரிகளையும் – அலுவலர்களையும் பாராட்டுகிறேன். வாழ்த்துகிறேன்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாராட்டியுள்ளார்.

## இந்திய குடியரசுத் தலைவர் விருந்தில் முதல்வர் பங்கேற்பு!

# ஜி 20 மாநாட்டில் பல்வேறு பொருளாதார ஒப்பந்தங்கள் கையெழுத்து!

## அமெரிக்க அதிபர் ஜோ பைடனை சந்தித்தார் முதல்வர் மு.க.ஸ்டாலின்!

**புதுடெல்லி, செப். 12 -**

**புதுடெல்லியில் நடைபெறும் ஜி 20 மாநாட்டில் பங்கேற்க வந்த உலகத் தலைவர்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் நேற்று முன்தினம் விருந்து அளித்தார். அவரது அழைப்பின் பேரில் புதுடெல்லி சென்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அந்த விருந்தில் பங்கேற்றார்.**

**விருந்தின்போது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து கைகுலுக்கி உரையாடினார். இந்த மாநாட்டில், இந்தியா - மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே பொருளாதார வழித்தடத்திற்கான வரலாற்று ஒப்பந்தம் கையெழுத்தானது என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் குறிப்பிட்டுள்ளார்.**

அமெரிக்கா, ரஷ்யா, பிரிட்டன், பிரான்ஸ், ஜெர்மனி, ஐரோப்பிய யூனியன், சீனா, இந்தியா, ஜப்பான், சவூதி அரேபியா உள்ளிட்ட 20 நாடுகளை கொண்ட ஜி20 அமைப்பின் 18வது உச்சி மாநாடு டெல்லியில் நடைபெறுகிறது. பல்வேறு காரணங்களுக்காக ரஷ்ய அதிபர் புதின், சீன அதிபர் ஜின்பிங் ஆகியோர் கலந்து கொள்ளவில்லை.

டெல்லி பாரத் மண்டபத்தில் ஜி20 மாநாட்டில் அமெரிக்க அதிபர் ஜோ பைடன், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, ஆஸ்திரேலிய பிரதமர் அன்டோனி அல்பானிஸ், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா, ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, துருக்கி அதிபர் எர்டோகன், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யன் உள்ளிட்டோர் மாநாட்டில் பங்கேற்றனர்.

ஒரே பூமி, ஒரே குடும்பம், ஒரே எதிர்காலம் என்ற கருப்பொருளுடன் ஜி 20 மாநாடு நடைபெற்றது. ஜி 20 நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பல்வேறு துறைகளில் இந்நாடுகள் அனைத்தும் இணைந்து செயல்படுவது, பருவநிலை மாற்றம் உள்ளிட்ட பல்வேறு விவகாரங்கள் குறித்து இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்டது.

**குடியரசுத் தலைவர் விருந்து!**

முன்னதாக ஜி20 மாநாட்டுக்கு வருகை தந்துள்ள உலகத் தலைவர்களுக்கு குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு விருந்தளித்து சிறப்பித்தார். விருந்து நிகழ்ச்சியில் பங்கேற்க ஒன்றிய அமைச்சர்கள் மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உட்பட அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் குடியரசுத்தலைவர் அழைப்பு விடுத்திருந்தார். அதனையேற்று, முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிறப்பு விருந்தில் கலந்து கொண்டார்.

**அமெரிக்க அதிபருடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் சந்திப்பு!**

விருந்தில் பங்கேற்ற அனைத்து தலைவர்களையும், குடியரசுத் தலைவர் முர்மு நேரில் வரவேற்று சிறப்பித்தார். இந்நிலையில், விருந்து நிகழ்ச்சியின்போது அமெரிக்க அதிபர் ஜோ பைடன் அவர்களை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து கைகுலுக்கி உரையாடினார்.

அப்போது குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு, துணை குடியரசுத் தலைவர் ஜெகதீப் தங்கர், பிரதமர் மோடி உள்ளிட்டோர் உடனிருந்தனர். டெல்லி நிகழ்ச்சியை முடித்து கொண்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் விமானம் மூலம் நேற்று முன்தினம் காலை சென்னை புறப்பட்டார். முன்னதாக தமிழ்நாடு இல்லம் முன்பு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு காவல் துறை அணிவகுப்பு மரியாதை அளிக்கப்பட்டது. இதனை முதலமைச்சர் ஏற்றுக்கொண்டார்.

இந்நிலையில், மாநாட்டின் 2ஆம் நாள் கூட்டம் நேற்று நடைபெற்றது. இதில், ஜப்பான் பிரதமர் ஃபுமியோ கிஷிடா, ஆஸ்திரேலிய பிரதமர் ஆண்டனி அல்பானிஸ், பிரிட்டன் பிரதமர் ரிஷி சுனக், கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ, துருக்கி அதிபர் எர்டோகான், ஐக்கிய அரபு அமீரக அதிபர் ஷேக் முகமது பின் சயத் அல் நஹ்யன், வங்கதேச பிரதமர் ஷேக் ஹசீனா உள்ளிட்டோர் கலந்து கொண்டுள்ளனர். இக்கூட்டத்தில், உலகளாவிய பல்வேறு பிரச்சினைகள் குறித்து ஜி20 நாடுகளின் தலைவர்கள் விவாதித்து வருகின்றனர்.

இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள சமூக வலைதள பதிவில், ஜி20 மாநாட்டில் ஆக்கப் பூர்வமான விவாதங்கள் நடைபெற்றன என குறிப்பிட்டுள்ளார்.


**அமெரிக்க அதிபர் ட்விட்டர் பதிவு!**

டெல்லியில் நடைபெற்று வரும் ஜி20 உச்சி மாநாட்டில் உரையாற்றிய பிரதமர் மோடி, இந்தியா மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே பொருளாதார வழித்தடத்திற்கான ஒப்பந்தம் இறுதி செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அமெரிக்க அதிபர் ஜோ பைடன், இந்தியா - மத்திய கிழக்கு ஐரோப்பா இடையே பொருளாதார வழித்தடத்திற்கான வரலாற்று ஒப்பந்தத்தை அமெரிக்கா, இந்தியா, சவுதி அரேபியா, ஐக்கிய அரபு அமீரகம், பிரான்ஸ், ஜெர்மனி, இத்தாலி, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகள் ஒன்றிணைந்து இறுதி செய்துள்ளது மகிழ்ச்சியும், பெருமையும் அளிப்பதாக தெரிவித்துள்ளார். இந்த ஒப்பந்தம் அதிக தடங்களை ஏற்படுத்துவதுடன், பெரிய அளவிலான முதலீடுகளுக்கு வழிவகுக்கும் என்று அமெரிக்க அதிபர் ஜோ பைடன் தெரிவித்துள்ளார்.

முன்னதாக டெல்லியில் உள்ள மகாத்மா காந்தி நினைவிடத்தில் ஜி20 நாடுகளின் தலைவர்கள் மரியாதை செலுத்தினர். ராஜ்காட்டுக்கு வருகை தந்த உலக நாடுகளின் தலைவர்கள், அங்கு தேச தந்தை மகாத்மா காந்தியின் நினைவிடத்தில் மரியாதை செலுத்தினர். உலக தலைவர்களை பிரதமர் மோடி கதர் சால்வை அணிவித்து வரவேற்றார்.

டெல்லி ஜி20 மாநாட்டின்போது அந்த அமைப்பின் தலைமை பொறுப்பை பிரேசிலிடம் பிரதமர் மோடி ஒப்படைத்தார். இதற்கு அடையாளமாக சுத்தியலை பிரேசில் அதிபர் லூயிஸ் இனாசியோ லூலா டா சில்வாவிடம் பிரதமர் மோடி வழங்கினார்.



இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 12-09-2023

# ‘இந்தியா’வின் முதல் வெற்றி!

‘இந்தியா’ கூட்டணியில் இடம்பெற்றுள்ள கட்சிகள் நடந்து முடிந்துள்ள இடைத் தேர்தல்களில் வெற்றி பெற்றுள்ளன. இது ‘இந்தியா’ கூட்டணிக்குக் கிடைத்த முதல் வெற்றி ஆகும்.

6 மாநிலங்களில் உள்ள 7 சட்டப்பேரவைத் தொகுதிகளுக்கு நடைபெற்ற இடைத்தேர்தலில் பா.ஜ.க. பின்னடைவை சந்தித்துள்ளது. இது பா.ஜ.க.வுக்கு அடுத்தடுத்து வரப் போகும் தோல்வியின் தொடக்கமாக அமைந்திருக்கிறது.

*** உத்தரப்பிரதேச மாநிலம் கோசி தொகுதியை சமாஜ்வாதி கட்சி கைப்பற்றி இருக்கிறது.**

*** கேரள மாநிலத்தில் உள்ள புதுப்பள்ளி தொகுதியை காங்கிரஸ் கட்சி கைப்பற்றி இருக்கிறது.**

*** மேற்கு வங்க மாநிலத்தில் உள்ள துப்குரி தொகுதியை திரிணாமூல் காங்கிரஸ் கட்சி கைப்பற்றி இருக்கிறது.**

*** ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள தும்ரி தொகுதியை ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி கைப்பற்றி இருக்கிறது.**

காங்கிரஸ், சமாஜ்வாதி, திரிணாமூல் காங்கிரஸ், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா ஆகியவை ‘இந்தியா’ கூட்டணியில் இடம்பெற்றுள்ள முக்கிய கட்சிகள் ஆகும்.

* திரிபுரா மாநிலத்தில் பாக்ஸாநகர், தன்பூர் ஆகிய இரு தொகுதிகளையும் பா.ஜ.க. கைப்பற்றி இருக்கிறது.

* உத்தரகண்ட் மாநிலத்தில் பாகேஸ்வர் தொகுதியையும் பா.ஜ.க. கைப்பற்றி உள்ளது.

இருப்பினும், உத்தரப்பிரதேசம், மேற்கு வங்கம், கேரளா ஆகியவை மிகப் பெரிய மாநிலங்கள் என்பதால் ‘இந்தியா’ கூட்டணிக் கட்சிகளின் வெற்றிக்கு கூடுதல் முக்கியத்துவம் கிடைத்துள்ளது.

**6 மாநிலங்களை உள்ளடக்கிய 7 தொகுதிகளுக்கு கடந்த 5 ஆம் தேதி இடைத்தேர்தல் நடந்தது. இந்த தேர்தல்கள் அந்தந்த மாநில அளவில் மிகமிக முக்கியமானவையாக கருதப்பட்டன. ‘இந்தியா’ கூட்டணி உருவானதால் அகில இந்திய அளவிலும் கவனத்தைப் பெற்றன.**

இதில் மிகமிக முக்கியமானது உத்தரப்பிரதேச மாநிலம் கோசி சட்டமன்றத் தொகுதிக்கு நடந்த இடைத்தேர்தல் ஆகும். சமாஜ்வாதி கட்சியிடம்தான் இந்த தொகுதி இருந்தது. எம்.எல்.ஏ.வான தாராசிங் சௌகான் என்பவரை, வலுக்கட்டாயமாக பா.ஜ.க.வுக்கு இழுத்துச் சேர்த்தார் முதலமைச்சர் யோகி ஆதித்யநாத். அவர் கடந்த ஜூலை மாதம் தனது பதவியை ராஜினாமா செய்து விட்டு பா.ஜ.க.வில் இணைந்தார். பா.ஜ.க.வில் இணைந்தால், இடைத்தேர்தலிலும் நீங்கள்தான் பா.ஜ.க. வேட்பாளர் என்று யோகி வாக்குறுதி கொடுத்தார். பா.ஜ.க. சார்பில் தாராசிங் சௌகான் போட்டியிட்டார். சமாஜ்வாதி கட்சி சார்பில் சுதாகர் சிங் போட்டியிட்டார். இரண்டு கட்சிகளுக்கும் கடுமையான மோதல் ஏற்பட்டது. பா.ஜ.க. வேட்பாளரை விட 42 ஆயிரம் வாக்குகள் அதிகம் பெற்று சமாஜ்வாதி வேட்பாளர் வெற்றி பெற்றுவிட்டார்.

இது யோகிக்கு மிகப் பெரிய சறுக்கலாக அமைந்துள்ளது. இதன் மூலம் எதிர்க்கட்சி எம்.எல்.ஏ.க்களை வலைவீசி பிடிக்கும் பா.ஜ.க. பார்முலாவுக்கு உத்தரபிரதேச மக்கள் சம்மட்டி அடி கொடுத்துள்ளனர்.

**உத்தரப்பிரதேசத்தில் கடந்த 6 மாதங்களில் 3 சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடைத்தேர்தல் நடைபெற்றது. இதில், 3 தொகுதி களிலும் பா.ஜ.க. படுதோல்வியடைந்தது. இந்த 3 தொகுதிகளிலும் மிகப்பெரிய வாக்குகள் வித்தியாசத்தில் பா.ஜ.க. தோல்வியைத் தழுவியிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.**

**கேரள மாநிலம் புதுப்பள்ளி தொகுதியில் காங்கிரஸ் முன்னாள் முதலமைச்சர் உம்மன் சாண்டியின் மகன் சாண்டி உம்மன் 37 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார்.** காங்கிரஸ் வேட்பாளர் 80 ஆயிரம் வாக்குகளும், அடுத்து வந்த மார்க்சிஸ்ட் வேட்பாளர் 42 ஆயிரமும் பெற்ற நிலையில் பா.ஜ.க. மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டது. பா.ஜ.க. வேட்பாளர் லிஜின் லால் வாங்கிய வாக்குகள் 6 ஆயிரத்து 558 தான். இவரது டெபாசிட்டே பறி போய்விட்டது. இதே தொகுதிக்கு 2021 ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளர் ஹரி வாங்கிய வாக்குகள் 11 ஆயிரத்து 694. இப்போது இரண்டு ஆண்டுகளில் 5 ஆயிரம் வாக்குகள் பா.ஜ.க.வுக்கு குறைந்து விட்டது. இதுதான் உன்னிப்பாக கவனிக்கத்தக்கது ஆகும்.

**மேற்குவங்க மாநிலம் துப்குரி தொகுதி, பா.ஜ.க. வசம் முன்பு இருந்தது. பா.ஜ.க. எம்.எல்.ஏ.வான விஷ்ணுபத ராய் மரணம் அடைந்தார். எனவே அத்தொகுதியில் நடைபெற்ற இடைதேர்தலில் திரிணாமுல் காங்கிரஸ் வெற்றி வாகை சூடியுள்ளது. அக்கட்சி வேட்பாளர் நிர்மல் சந்திர ராய், தன்னை எதிர்த்து போட்டியிட்ட பா.ஜ.க. வேட்பாளரை காட்டிலும் 4 ஆயிரத்துக்கும் அதிக வாக்குகள் பெற்று வெற்றியை தனதாக்கினார். காஷ்மீரில் மரணம் அடைந்த சி.ஆர்.பி.எப். வீரர் மனைவியை நிறுத்தி அனுதாப வாக்குகளை வாங்க முயற்சித்தது பா.ஜ.க. அதிலும் தோல்வியைத் தழுவியது.**

ஜார்க்கண்ட் மாநிலம் தும்ரி தொகுதியில் நடைபெற்ற இடைத்தேர்தலில் ஜார்க்கண்ட் முக்தி மோர்ச்சா கட்சி வேட்பாளர் பிபி தேவி, 1 லட்சத்துக்கும் கூடுதலான வாக்குகளை பெற்றுள்ளார். 17 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வாக்குகள் வித்தியாசத்தில் பா.ஜ.க. ஆதரவு வேட்பாளரை தோற்கடித்தார்.

திரிபுரா மாநிலத்திலுள்ள 2 தொகுதிகளிலும், உத்தரகாண்ட் மாநிலத்திலுள்ள ஒரு தொகுதியிலும் பா.ஜ.க. வெற்றி பெற்றது. உத்திரகாண்டில் பா.ஜ.க. எம்.எல்.ஏ. சந்தன் ராம் தாஸ் அண்மையில் மரணம் அடைந்தார். அவரது மனைவியையே வேட்பாளராக நிறுத்தியது பா.ஜ.க. ஆனாலும் 2 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில்தான் பா.ஜ.க.வால் வெற்றி பெற முடிந்தது.

**- இவை அனைத்தையும் வைத்துப் பார்க்கும் போது, ‘இந்தியா’ கூட்டணியை நோக்கி இந்திய மக்கள் அணி திரள்வதை அறிய முடிகிறது.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (10.09.2023) செங்கல்பட்டு மாவட்டம், வடநெம்மேலியில் நடைபெற்ற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் செயலாளர் கே.சண்முகநாதன் அவர்களின் பெயர்த்தி டாக்டர் ஆர்.ஷாலினி, டாக்டர் எஸ்.ஷியாம் விக்னேஷ் குமார் ஆகியோரது திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி மணமக்களை வாழ்த்தினார். உடன் முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி துர்கா ஸ்டாலின், திருமதி செல்வி செல்வம் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உள்ளனர்.

### கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை பெற

# குடும்பத் தலைவிகளுக்கு பிரத்யேக ஏ.டி.எம். கார்டு!

## ரேஷன் கடைகள் மூலம் விநியோகிக்க திட்டம்!

சென்னை, செப். 12 -

கலைஞர் மகளிர் உரிமைத்தொகையை பெற குடும்ப தலைவிகளுக்கென பிரத்யேக ஏ.டி.எம் கார்டுகளை ரேஷன் கடைகள் மூலம் விநியோகம் செய்ய திட்டமிடப்பட்டு வருகிறது.

தமிழ் நாட்டில் கடந்த சட்டப்பேரவை தேர்தலில் தி.மு.க. தேர்தல் அறிக்கையில் குடும்ப தலைவிகளுக்கு உதவும் வகையில் மாதம்தோறும் ரூ.1000 வழங்கப்படும் என அறிவித்திருந்தது. அதன்படி, ஆட்சி பொறுப்பேற்ற பின்னர் இத்திட்டம் தொடர்பாக அனைத்து தரப்பு மக்களின் எதிர்பார்ப்பு அதிகமாகவே இருந்தது. அந்தவகையில் கடந்தாண்டு நடந்த சட்டப்பேரவை மானியக் கோரிக்கையின் போது மகளிர் உரிமைத் தொகை செப்.15ம் தேதி முதல் வழங்கப்படும் என. முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதற்காக நிதித் துறை தரப்பிலும், 7 ஆயிரம் கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், தகுதி வாய்ந்த பெண்களுக்கு உரிமைத் தொகை அவர்களது வங்கி கணக்கில் செலுத்துவதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டது.

அதனடிப்படையில், பல்வேறு வழி காட்டு நெறிமுறைகள் வகுக்கப்பட்டு ரேஷன் கடை ஊழியர்கள் மூலமாக விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டன. மேலும், இதற்கான விண்ணப்பங்களை முறையாக பதிவு செய்யும் முகாம்களும் நடத்தப்பட்டன. இதில் ஒட்டுமொத்தமாக தமிழகம் முழுவதும் 1.63 கோடி குடும்ப தலைவிகள் விண்ணப்பித்திருந்தனர். அந்தவகையில் விண்ணப்பித்தவர்களின் வீடுகளுக்கு நேரில் சென்று அதிகாரிகள் ஆய்வு மேற்கொண்டு விண்ணப்பதாரர்களை அடையாளம் கண்டு தேர்வு செய்துள்ளனர். இந்த உரிமைத் தொகையை பெற வங்கி கணக்குகள் கட்டாய மாக்கப்பட்ட நிலையில், வங்கி கணக்கு இல்லாதவர்கள் தேசியமயமாக்கப்பட்ட வங்கி அல்லது கூட்டுறவு வங்கிகளில் அவர்களின் கணக்குகளை தொடங்கவும் அறிவுறுத்தப்பட்டன.

இந்நிலையில், குடும்ப தலைவிகள் இந்த தொகையை பெற பிரத்யேக ஏ.டி.எம். கார்டு (ரூபே கார்டு) தயாராகி வருகிறது. இந்த கார்டுகளை ரேஷன் கடைகள் மூலமாக குடும்ப தலைவிகள் பெற்று பணத்தை எடுத்துக்கொள்ளலாம்.

அதன்படி, இந்த திட்டத்தை அண்ணா பிறந்த நாளான வரும் 15ம் தேதி காஞ்சிபுரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். முதல்வர் தொடங்கி வைத்த பின்னர், குடும்ப தலைவிகளின் வங்கி கணக்கில் ரூ.1000 செலுத்தப்படும். இதனையடுத்து, அடுத்த மாதம் 1ம் தேதி முதல் பிரத்யேகமாக வழங்கப்பட்ட ஏ.டி.எம். கார்டுகள் மூலம் அந்த பணத்தை பெற்றுக்கொள்ளலாம். அதேபோல, விண்ணப்பங்கள் நிராகரிக்கப் பட்ட குடும்ப தலைவிகள் அவர்களின் பகுதிகளில் உள்ள ஆர்.டி.ஓ.,விடம் சென்று முறையிட்டு நிவாரணத்தை தேடிக்கொள்ள வழிவகையும் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வரின் தலைமையில் மகளிர் உரிமைத் தொகை தொடர்பான இறுதி ஆலோசனைக் கூட்டம் நேற்று நடைபெற்றது.

### மதுரையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா கருத்தரங்கு!

# கழக முன்னோடிகள் 100பேருக்கு பொற்கிழி வழங்கி கவுரவிப்பு!

## அந்தியூர் செல்வராஜ் எம்.பி.- அமைச்சர்கள் பி.மூர்த்தி - பி.டி.ஆர் பழனிவேல் தியாகராஜன் - செஞ்சி மஸ்தான் - கயல்விழி செல்வராஜ் - மதிவேந்தன் பங்கேற்பு!

மதுரை, செப் 12-

மதுரையில் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கழக மாநில ஆதிதிராவிடர் நல குழு மற்றும் சிறுபான்மையினர்நல உரிமை பிரிவு சார்பில் மாபெரும் கருத்தரங்கம் நடைபெற்றது. இந்த கருத்தரங்கு நிகழ்ச்சிக்கு பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி தலைமை வகித்தார். முன்னாள் சட்டமன்ற உறுப்பினர், ஆதிதிராவிடர் நலக்குழு இணைச் செயலாளர் வி.பி.ராசன், ஆதி திராவிட நலக்குழு மாநில துணைச் செயலாளர், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.மாரியப்பன் கென்னடி ஆகியோர் வரவேற்று பேசினார்கள்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மருதூர் ஏ.ராமலிங்கம், செ.புஷ்பராஜ், மாநில இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுச்சாமி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் பி.துரைச்சாமி, ஊட்டி பொன்தோஸ், சென்னை சி.தசரதன், மு. பரமானந்தம், ஆரூர் சா. ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தார்கள்.

சிறப்பு அழைப்பாளர்களாக மாநிலத் துணைப் பொதுச் செயலாளர், முன்னாள் அமைச்சர், நாடாளுமன்ற உறுப்பினர் அந்தியூர் செல்வராஜ், சிறுபான்மை துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான், ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், வனத் துறை அமைச்சர் டாக்டர் மதிவேந்தன், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி.மூர்த்தி, தகவல் தொழில் நுட்பம் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் பி.டி.ஆர். பழனிவேல் தியாக ராஜன், மதுரை மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., மதுரை தெற்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன், கழக தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, மதுரை மாநகராட்சி மேயர் இந்திராணி பொன்வசந்த், கழக உயர் நிலை செயல்திட்ட குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு, ஆ.வெங்கடேசன் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் எம். முத்துராமலிங்கம், சௌந்தர பாண்டியன், மாவட்ட துணைச் செயலாளர் மணிமுத்து, ராகவன், சிவனாண்டி, சிறுபான்மை நலப் பிரிவு மாநில தலைவர் சுபேதார் கான், மாநகர் அமைப்பாளர் உஸ்மான் அலி, அமைப்பாளர்கள் கொசஸ்டின் பிச்சை, மீரா ஜான், சாக்ளா ஆகியோர் அழைக்கப்பட்டு வாழ்த்துரை வழங்கி சிறப்பித்தார்கள்.

காலத்தை வென்றவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் என்னும் தலைப்பில் தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையத் தலைவர் பீட்டர் அல்போன்ஸ், சண்ட மாருதப் பேச்சாளர் நாஞ்சில் சம்பத், முன்னாள் அமைச்சர் மாநில இலக்கிய அணி புரவலர் மு.தென்னவன் ஆகியோர் எழுச்சி உரை ஆற்றி சிறப்பித்தார்கள்.

மேலும் மாவட்ட ஆதிதிராவிடர் நலக்குழு அமைப்பாளர்கள் ஜெகஜீவன் என்ற ஜீவா, சி.பரமசிவம், மா.சிங்கமுத்து, பி.முருகன் மற்றும் நிர்வாகிகள் கழகத்தினர் என பெரும் திரளானோர் பங்கேற்றார்கள்.

இந்நிகழ்ச்சியின் முடிவில் நகர் மாவட்ட அமைப்பாளர் இ.எல்.பாலா நன்றி கூறினார்.

சிறப்புமிக்க இந்நிகழ்ச்சியில் கழக மூத்த முன்னோடிகள் 100 பேருக்கு பொற்கிழி வழங்கி சிறப்பிக்கப்பட்டது.

## ஒகேனக்கல்லுக்கு 5 ஆயிரம் கன அடி நீர்வரத்து!

தருமபுரி, செப். 12 -

காவிரி மேலாண்மை வாரிய உத்தரவுப்படி கர்நாடக அணைகளில் இருந்து காவிரி ஆற்றில் தமிழகத்திற்கு தண்ணீர் வினாடிக்கு 7 ஆயிரம் கன அடியாக திறக்கப்பட்டது. ஆனால் தற்போது நீர்திறப்பு படிப்படியாக குறைக்கப்பட்டு வினாடிக்கு 2ஆயிரம் கன அடியாக திறக்கப்பட்டுள்ளது. கர்நாடகா அணைகளில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீர் காவிரி ஆற்றில் தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு வழியாக தருமபுரி மாவட்டம் ஒகேனக்கல்லுக்கு வந்தடையும். இதன் காரணமாக ஒகேனக்கல்லுக்கு கடந்த 2 நாட்களாக நீர்வரத்து வினாடிக்கு 6,500 கன அடியாக நீடித்து வந்து கொண்டிருந்தது.

இந்த நிலையில் தற்போது கர்நாடகா அரசு காவிரி ஆற்றில் நீர் திறப்பு குறைந்ததால், ஒகேனக்கல்லுக்கு நீர்வரத்து சரிந்து வினாடிக்கு 5 ஆயிரம் கன அடியாக வந்தது.

மேலும் நீர்வரத்து குறைந்தாலும், ஒகேனக்கல் ஐந்தருவி, சினி பால்ஸ் உள்ளிட்ட அருவிகளில் தண்ணீர் ஆர்ப்பரித்து கொட்டுகிறது. இதற்கிடையே நேற்று முன்தினம் விடுமுறை நாள் என்பதால் ஒகேனக்கல்லில் ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்திருந்தனர். சுற்றுலா பயணிகள் எண்ணை மசாஜ் செய்து மெயின் அருவியில் குளித்து மகிழ்ந்தனர். பின்னர் அவர்கள் பரிசலில் சென்று சவாரி செய்து மகிழ்ந்தனர். இதன் காரணமாக மீன் கடைகள், கடைவீதி ஆகிய பகுதிகளில் பொது மக்களின் கூட்டம் அதிகமாக காணப்பட்டது. கர்நாடக அணைகளில் இருந்து திறக்கப்பட்ட தண்ணீரின் அளவை பிலிகுண்டுலுவில் தொடர்ந்து மத்திய நீர் வளத்துறை அதிகாரிகள் கண்காணித்து வருகின்றனர்.

# பட்டிக்காடும் பட்டணமும்



**பட்டிக்காடு :** ஏன் தம்பி; ‘எந்த சக்தியாலும் சனாதன தர்மத்தை ஒழிக்க முடியாது’ என்று பா.ஜ.க. தலைவர் ஜெய்ராம் தாக்கூர் என்பவர் கூறியிருக்கிறாரே ?

**பட்டணம் :** ஆமாம் அய்யா; **‘சனாதனம்’ என்றால் நிலையானது என்று பொருள்.**

**இந்த உலகில் நிலையானது என்று எதுவும் இல்லை - என்பது பூமிப் பந்தின் பொது புத்தியில் பொதிந்துள்ள உண்மையாகும். அனைத்தும் மாறிக்கொண்டே இருக்கின்றன. மாற்றம் என்பது மட்டுமே மாறாத உண்மை.**

**அய்யன் திருவள்ளுவர், ‘ நிலையாமை’ என்ற அதிகாரத்தின் முதல் குறளாக: “நில்லாதவற்றை நிலையின என்றுணரும் புல்லறிவாமை கடை”; அதாவது, நிலையற்றவைகளை நிலையானவை என நம்புகின்ற அறியாமை மிக இழிவானதாகும் - என்று பொறித்துள்ளதைப் பார்த்து, படித்து, அறிந்து, தெளிவு பெறுவது நல்லது !**

### தெலுங்கு தேசக் கட்சித் தலைவர் - முன்னாள் முதல்வர்

# சந்திரபாபு நாயுடு கைது - சட்ட விரோதம் என குற்றச்சாட்டு!

## ஆந்திர மாநிலத்தில் பேருந்துகள் ஓடவில்லை - பதற்றம் நீடிப்பு!



திருமலை, செப். 11 -

ஆந்திர முன்னாள் முதல்வர் சந்திர பாபுநாயுடு நேற்று முன்தினம் அதிகாலை அதிரடியாக கைது செய்யப்பட்டார். இதனால் தெலுங்கு தேசம் கட்சியினர் பல இடங்களில் போராட்டத்தில் ஈடுபட்டனர். தொடர்ந்து பதற்றம் நிலவுவதால், அங்கு பஸ்கள் நிறுத்தப்பட்டது.

ஆந்திர மாநிலத்தில் சந்திரபாபு நாயுடு முதல்வர் பதவியில் இருந்த போது 'சிமென்' என்ற நிறுவனத்துடன் இணைந்து ரூ.3,350 கோடியில் இளைஞர்களுக்கு திறன் மேம்பாட்டு பயிற்சி அளிக்கும் வகையில் கடந்த 2015ம் ஆண்டு திட்டம் அறிவிக்கப்பட்டது. இந்த திட்டத்தில் மிகப்பெரிய ஊழல் நடந்திருப்பதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன. இதையடுத்து கடந்த 2017ம் ஆண்டு ஜி.எஸ்.டி. வருவாய் புலனாய்வு அதிகாரிகள் புனேவில் உள்ள டிஜிட்டல் டெக் நிறுவனத்தில் சோதனை மேற்கொண்டனர். இதில் ரூ.241கோடி போலி நிறுவனத்தில் முதலீடு செய்யப்பட்டு, ஹவாலா பணமாக சந்திரபாபு நாயுடுவிற்கு கைமாறியதாக தெரியவந்தது.

இதில் வருமான வரித்துறை, அமலாக்க இயக்குனரகம், சி.பி.ஐ. விசாரணை மேற்கொண்டு வந்தது. இந்த திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்ததில் ரூ.300 கோடிக்கு மேல் ஊழல் நடந்திருப்பது தெரியவந்துள்ளது. மேலும் சிமென் நிறுவனத்தின் அப்போதைய நிர்வாக இயக்குனராக இருந்த சுமன் போஸ் மோசடி நடந்ததை ஒப்புக் கொண்டுள்ளார். ஆனால் மோசடி பணம் எவ்வாறு கைமாறியது என விசாரணை மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேலும் கடந்த 2021ம் ஆண்டு டிசம்பர் 19ம் தேதி ஜெகன் மோகன் தலைமையிலான மாநில அரசு சிறப்பு புலனாய்வு அமைப்பு ஏற்பாடு செய்தது. விசாரணையில் ஊழல் நடந்தது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் சந்திரபாபுநாயுடு நந்தியாலாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு இருந்த நிலையில், நேற்று முன்தினம் இரவு ஆர்.கே.பங்ஷன் ஹாலில் தங்கினார். நேற்று அதிகாலை 3 மணிக்கு சந்திரபாபுநாயுடு தூங்கிக்கொண்டு இருந்தபோது டி.ஐ.ஜி. ரகுராம் தலைமையிலான சி.ஐ.டி. அதிகாரிகள் மற்றும் போலீசார் அங்கு சென்றனர். அப்போது தெலுங்கு தேசம் கட்சியினரை அப்புறப்படுத்தி கேரவேனை தட்டி சந்திரபாபுநாயுடுவை எழுப்பி கைது செய்வதாக கூறினர். மேலும் போலீசார் உரிய ஆவணங்களை காண்பித்து சந்திரபாபு நாயுடுவிடம் கைது செய்வதற்காக கையெழுத்து பெற்றனர். பின்னர் அதே இடத்தில் மருத்துவ குழுவினர் வரவழைக்கப்பட்டு சந்திரபாபுவுக்கு மருத்துவ பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. பின்னர் காலை 6 மணிக்கு சந்திரபாபு நாயுடுவை கைது செய்தனர்.

தொடர்ந்து அவரை ஹெலிகாப்டரில் அழைத்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது. ஆனால் அவர் தனது காரில் வருவதாக கூறியதால் அவரது காரிலேயே பலத்த பாதுகாப்பிற்கு மத்தியில் விஜயவாடாவில் உள்ள லஞ்ச ஒழிப்புத்துறை சிறப்பு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டார். இதேபோன்று சந்திரபாபுநாயுடு ஆட்சியில் கல்வித் துறை அமைச்சராக இருந்த கண்டா ஸ்ரீனிவாசையும் போலீசார் கைது செய்தனர். இந்த வழக்கில் முன்னாள் அமைச்சர் அச்சம் நாயுடு பெயரும் இடம் பெற்றுள்ளது. ஏற்கனவே இந்த வழக்கில் 10 பேர் கைது செய்யப்பட்ட நிலையில் டிஜிட்டல் டெக் நிறுவனத்தின் ரூ.31 கோடியை அமலாக்கத்துறை முடக்கம் செய்துள்ளது.

ஏற்கனவே வருமானவரித்துறை இதே குற்றச்சாட்டில் ரூ.116 கோடி கணக்கில் வராமல் சந்திரபாபுநாயுடுவிற்கு கைமாறியதாக நோட்டீஸ் அனுப்பி இருந்தது குறிப்பிடத்தக்கது. சந்திரபாபுநாயுடு கைது செய்யப்பட்டதால் ஆந்திராவில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. பல இடங்களில் தெலுங்கு தேசம் கட்சியின் முக்கிய தலைவர்கள் வீட்டுக் காவலில் வைக்கப்பட்டனர். அதையும் மீறி சிலர் சாலைகளில் வந்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதோடு டயர்களை கொளுத்தி தங்கள் எதிர்ப்பை தெரிவித்து முதல்வருக்கு எதிராக கோஷங்களை எழுப்பினர். ஒரு சில இடங்களில் போலீசார் தடியடி நடத்தி போராட்டக்காரர்கள் கூட்டத்தை கலைத்தனர். மாநிலம் முழுவதும் முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக போலீசார் பேருந்து சேவையை நிறுத்தி வைத்தனர். இதனால் பல்வேறு ஊர்களுக்கு செல்ல இருந்த பயணிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகினர். அதேபோல் பள்ளி, கல்லூரிகளுக்கு நேற்று விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**சட்டத்திற்கு விரோதமாக கைது!**

இதையடுத்து நேற்று முன்தினம் மங்களகிரியில் உள்ள சி.ஐ.டி. அலுவலகத்தில் சந்திரபாபு நாயுடுவின் வழக்கறிஞர் முன்னிலையில் அவரிடம் விசாரணை நடத்தினர். இதையடுத்து நேற்று காலை மருத்துவமனைக்கு அழைத்து சென்று சிஐடி போலீசார் மருத்துவ பரிசோதனை நடத்தினர். இதன்பின்னர் விஜயவாடாவில் உள்ள நீதிமன்றத்தில் அவரை சிஐடி போலீசார் ஆஜர்படுத்தினர். அங்கு தொடர்ந்து விவாதம் நடைபெற்றது. அப்போது சந்திரபாபு நாயுடு தரப்பில், தனக்கு எதிராக மாநில அரசு பொய் வழக்கு தொடுத்திருப்பதாகவும் கைது செய்தது சட்டத்திற்கு விரோதமானது என்றும் குற்றம் சாட்டி வாதிட்டனர்.

இதற்கிடையே, தொடர்ந்து பதற்றம் நீடிப்பதால் நெல்லூர் மாவட்டம் மற்றும் ராஜமுந்திரி பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து; ஜி20 மாநாட்டையொட்டி ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்துக்கு, அகில இந்தியக் காங்கிரஸ் தலைவரும், மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே அவர்களுக்கு அழைப்பு இல்லை என்பது சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கிறதே ?

**சிந்துமணி :** ஆமாண்டி அந்து; **ஜனநாயக நாட்டில் ஆளும் கட்சியும், எதிர்க் கட்சியும், ஒரே நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்றவை.**

**ஆளும் கட்சி எப்போதும் பெருந்தன்மையுடன் நடந்து, மரபுகளைப் பேண வேண்டும்.**

**ஒன்றிய பா.ஜ.க.விடம் உயர்ந்த பண்பாடுகளை ஒருபோதும் எதிர்பார்க்கக் கூடாது.**

**ஜனநாயகத்துக்குப் புறம்பானவற்றைச் செய்வதிலும்; 'சீப்பை ஒளித்து வைத்து, கல்யாணத்தை நிறுத்தி விடலாம்' என்று நினைப்பதிலும், ஒன்றிய பா.ஜ.க.வை விஞ்ச யாராலும் முடியாது !**

### இந்தியாவில் அசைவத்தைக் காட்டிலும்

# சைவ உணவுக்கான செலவு அதிகரிப்பு!

புதுடெல்லி, செப். 12-

இந்தியாவில் அசைவ உணவு விலையைக் காட்டிலும், சைவ உணவுக்கான செலவு அதிகரித்துள்ளதாக புள்ளி விவரங்கள் வெளியாகியுள்ளன.

'கிரிசில் மார்க்கெட் இன்டலிஜென்ஸ் மற்றும் அனலிட்டிக்ஸ்' நிறுவனத்தின் மாத இதழான 'ரோட்டி ரைஸ் ரேட்' (Roti Rice Rate) அறிக் கையில் இதனை தெரிவித்துள்ளது.

"ஜூலை மாதத்துடன் ஒப்பிடும் போது, ஆகஸ்ட் மாதத்தில் ஒரு சைவ சாப்பாட்டின் விலை மாதாந்திர அடிப்படையில் சிறிதளவு குறைந் துள்ளது, ஆனால் வருடாந்திர அடிப்படையில் இரண்டாவது முறையாக தொடர்ந்து உயர்த்துள்ளது.

அதாவது, சைவ சாப்பாடு விலையில் 24 சத விகிதம் அதிகரித்துள்ளது. ஆகஸ்ட் மாதத்தில் கிலோ ஒன்று க்கு 37 ரூபாயாக இருந்த தக்காளி விலை 102 ரூபாயாக அதிகரித்தது, சமையல் எரிவாயு சிலிண்டர் விலை உயர்வு ஆகியவையே சைவ உணவு விலை அதிகரிக்கக் காரணமாக இருந்துள்ளது.

குறிப்பாக வீட்டு உபயோக சிலிண்டர்கள் விலை குறையாததால் மக்கள் மிகவும் சிரமப்பட்டனர். ஹோட்டல் உரிமையாளர்களும் கடுமையாகப் பாதிக்கப்பட்டனர். சைவ உணவுக்கான செலவின அதிகரிப்பில், 21 சதவிகிதம் அளவிற்கு தக்காளியின் விலை உயர்வு மட்டுமே காரணமாக அமைந்துள்ளது;

வருடாந்திர அடிப்படையில் தக்காளி விலை 176 சதவிகிதம் உயர்ந்துள்ளது; வெங்காயத்தின் விலை 8 சதவிகிதம், மிளகாய் விலை 20 சதவிகிதம் மற்றும் சீரகம் விலை 158 சதவிகிதம் என செலவு அதி கரித்துள்ளது" என்றும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

மேலும், சைவ உணவுக்கான செலவானது, அசைவ உணவுக்கான செலவைக் காட்டிலும் அதிகமாக இருந்துள்ளது என்றும் குறிப்பிடப்பட்டு உள்ளது. அசைவ உணவுக்கான செலவினத்தில் 50 சதவிகிதத்தை கோழி இறைச்சி பெறுகிறது. ஆனால், பிராய்லர் கோழியின் விலை குறைந்துள்ளதால், கடந்த ஆண்டைக் காட்டிலும் இந்த ஆண்டு 3 சதவிகிதம்தான் விலை அதிகரித்துள்ளது. எனவே, அசைவ உணவு விலை குறைவாக உள்ளது என்று அறிக்கை கூறுகிறது.

### 'ஒரே மனிதன், ஒரே அரசு, ஒரே நிறுவனம்'

# இதுதான் மோடி அரசின் கொள்கை!

## காங்கிரஸ் கடும் தாக்கு

புதுடெல்லி, செப்.12-

'ஒரே மனிதன், ஒரே அரசு, ஒரே வணிக நிறுவனம்' இது தான் மோடியின் கொள்கை என காங்கிரஸ் கடுமையாக குற்றம்சாட்டி உள்ளது.

டெல்லியில் தொடங்கிய ஜி20 உச்சி மாநாடு நேற்று முன்தினம் நிறைவடைந்தது. இந்த மாநாட்டின் கருப்பொருள் 'ஒரு பூமி, ஒரு எதிர்காலம், ஒரு குடும்பம்' என முன்மொழியப்பட்டுள்ளது. இந்நிலையில் ஜி20 உச்சி மாநாட்டின் கருப்பொருளையும், அதானி விவகாரத்தில் மோடியின் நிலையையும் தொடர்புபடுத்தி காங்கிரஸ் பொதுசெயலாளர் ஜெய்ராம் ரமேஷ் குற்றம்சாட்டி உள்ளார்.

காங்கிரஸ் பொதுசெயலாளர் ஜெய்ராம் ரமேஷ் தனது டிவிட்டர் பதிவில் கூறியிருப்பதாவது: வெளிநாட்டுக்குத் தப்பியோடிய பொருளாதாரக் குற்றவாளிகள் லலித் மோடி, நீரவ் மோடி, முகுல் சோக்சி, விஜய் மல்லையா இன்னும் நாடு கடத்தப்படவில்லை. பிரதமர் மோடி தன் நெருங்கிய நண்பரான அதானிக்கு துறைமுகங்கள், விமான நிலையங்கள், மின்சாரம் மற்றும் சாலை துறைகளில் ஏகபோகங்களை உருவாக்க வெறுமனே உதவவில்லை.

மாறாக, செபி, சி.பி.ஐ., அமலாக்கத்துறை, வருவாய் புலனாய்வு இயக்குநரகம் மற்றும் தீவிர பண மோசடி விசாரணை அலுவலகம் ஆகியவை மூலம் அதானிக்கு எதிரான மோசடி குற்றச்சாட்டு விசாரணைகளுக்கு திட்டமிட்டு முட்டுக் கட்டை போட்டுள்ளார். இது விசாரணை அமைப்புகள் அதானிகளுக்கு எவ்வாறு அடிபணிந்தன என்பதற்கும், பெருநிறுவனங்களின் நண்பர் மோடி என்பதற்கும் சிறந்த உதாரணம். பிரதமர் மோடி 'ஒரே மனிதன், ஒரே அரசு, ஒரே வணிக நிறுவனம்' என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டவராக இருக்கிறார்.

இவ்வாறு ஜெய்ராம் ரமேஷ் குறிப்பிட்டு உள்ளார்.




### பொதுமக்கள் விரும்பும் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள்!

# 10 வருடங்களுக்குப் பிறகு கிராமங்களில் பள்ளிகள் மேம்படுத்தப்படுகின்றன!

## செட்டியபட்டியில் ஐ.பெரியசாமி பெருமிதம்!



ஆத்தூர் , செப்.12-

கிராம ஊராட்சிகளில் அனைத்து கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் விரும்பும் பள்ளிகளில் கூடுதல் வகுப்பறைகள் கட்டித் தரப்படும் என்று செட்டியபட்டி ஊராட்சியில் பள்ளிகளை ஆய்வு செய்ய வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பேசினார். 10வருடங்களுக்கு பிறகு கிராமங்களில் உள்ள பள்ளிகள் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆட்சியில் மேம்படுத்தப்படுகின்றன என ஐ.பெரியசாமி பெருமிதமாக கூறினார்.

திண்டுக்கல் மாவட்டம் ஆத்தூர் ஒன்றியத்தில் உள்ள செட்டியபட்டி, வீ. கூத்தம்பட்டி, பஞ்சம் பட்டி, முருகம்பட்டி, மற்றும் ரெட்டியார்சத்திரம் ஒன்றியத்திற்கு உட்பட்ட டி.பண்ணைப்பட்டி, கே. புதுக்கோட்டை, கொண்டமநாயக்கன்பட்டி, கோனூர், ஆகிய கிராமங்களில் உள்ள நடுநிலைப்பள்ளிகள் உயர்நிலைப்பள்ளிகளாகவும், உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக கடந்த தி.மு.க. ஆட்சியின் போது 10வருடங்களுக்கு முன்பு தரம் உயர்த்தப்பட்டன.

வருவாய்துறை அமைச்சராக இருந்த ஐ.பெரியசாமி அவர்களின் சீரிய முயற்சியால் ஆத்தூர் தொகுதியில் 10க்கும் மேற்பட்ட பள்ளிகள் மேல்நிலைப்பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டதோடு கிராமப்புற மாணவர்கள் சிரமமின்றி பள்ளிக்கல்வி பயிலும் நிலைக்கு உயர்ந்தனர். அதன்பின்பு கடந்த அ.தி.மு.க. ஆட்சியின் போது கடந்த 10வருடங்களாக ஆத்தூர் தொகுதியில் எந்த ஒரு பள்ளியும் தரம் உயர்த்தப்படவில்லை.

தற்போது திராவிட மாடல் ஆட்சியின் நாயகன் தி.மு.க. தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் ஆட்சி அமைந்தவுடன் குக்கிராமங்களில் உள்ள பள்ளி கட்டிடங்கள் கூட தரமானதாக கட்டிக் கொடுக்கப்படுவதோடு கிராம ஊராட்சிகளில் உள்ள பள்ளிகளில் கூடுதல் பள்ளி வகுப்பறைகள் நவீன வசதியுடன் கட்டிக்கொடுக்கப்பட்டு வருகின்றன. செட்டியபட்டி ஊராட்சி கிராம மக்களின் கோரிக்கையை ஏற்று அங்குள்ள மேல்நிலைப்பள்ளியை ஆய்வு செய்ய வந்த ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி செட்டியபட்டி ஊராட்சியில் செட்டியபட்டி மற்றும் கல்லுப்பட்டியில் மேல்நிலைப் பள்ளிகள் செயல்படுவதை பார்வையிட்ட அவர் கூடுதல் வகுப்பறைகள் நபார்டு நிதியுடன் கட்டும்போது ஒரே இடத்தில் மேல்நிலை பள்ளி படிக்கும் மாணவர்கள் நவீன வசதியுடன் புதிய வகுப்புறை கட்டிடம், மற்றும் ஆய்வக வசதி, விளையாட்டு மைதானத்துடன் மாணவர்கள் படிக்கக்கூடிய நிலைமை ஏற்படும் அதனால் செட்டியபட்டி மற்றும் கல்லுப்பட்டியில் எந்த கிராமத்தில் கூடுதல் வகுப்பறைகள் வேண்டும் என்பதை செட்டியபட்டி ஊராட்சிக்கு உட்பட்ட அனைத்து கிராம மக்களின் கருத்தினை கேட்ட பொது மக்கள் விரும்பும் இடங்களில் உள்ள பள்ளிகளுக்கு கூடுதல் வகுப்பறைகள் கட்டிக்கொடுக்கப்படும் என்றார்.

அதற்காக கூடுதல் வகுப்பறை கட்டுவதற்கு சிறப்பு கருத்து கேட்பு கூட்டத்தை ஊராட்சிமன்ற தலைவர் ராஜா ஏற்பாடு செய்ய வேண்டுமென உத்தரவிட்டார்.

ஆய்வின் போது வட்டாட்சியர் வடிவேல்முருகன், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் நசாரூதீன், நேர்முக உதவியாளர் கதிரேசன், ஆத்தூர் ஒன்றிய பெருந்தலைவர் மகேஸ்வரி முருகேசன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி ஆத்தூர் கிழக்கு ஒன்றிய திமுக செயலாளர் பிள்ளையார்நத்தம் முருகேசன், திமுக நிர்வாகி அம்பை ரவி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் லாரன்ஸ், தட்சினாமூர்த்தி, ஆத்தூர் கிழக்கு ஒன்றிய துணைச்செயலாளர்கள் எம்.சி.பாண்டியன், ராஜேந்திரன், ஒன்றிய பொருளாளர் ஜாதிக்கவுண்டன்பட்டி கருப்பையா, ஊராட்சிமன்ற தலைவர்கள் செட்டியபட்டி ராஜா, பிள்ளையார்த்தம் உலகநாதன், ஆலமரத்துப்பட்டி ஆறுமுகம், மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் பஞ்சம்பட்டி மணி, காந்திகிராமம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் ஜெயராமன், செட்டியபட்டி அரசு மேல்நிலை பள்ளி தலைமையாசிரியர் சிவசுப்பிரமணியன், உதவி தலைமையாசிரியர் சீனிவாசன், செட்டியபட்டி ஊராட்சி செயலாளர் வேல்முருகன் உட்பட பலர் கலந்துகொண்டனர். அப்பகுதியைச் சேர்ந்த பொதுமக்கள் கொடுத்த கோரிக்கை மனுக்களை பெற்று உடனடியாக தீர்வு வழங்கியதால் பொது மக்கள் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் ஐ.பெரியசாமி அவர்களுக்கு மனதார பாராட்டும் நன்றியும் தெரிவித்தனர்.



நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக்கூட்டம் திருச்செங்கோடு மேற்கு மாவட்ட தி.மு.க. அலுவலகத்தில் மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி தலைமையில் மாநில மகளிர் சமூக வலைதள பொறுப்பாளர் திருநங்கை அ.ரியா முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட துணை அமைப்பாளர் எம்.சாந்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.ஜோதி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.ராதிகா மற்றும் மாவட்ட மகளிர் அணி, மகளிர் தொண்டரணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



திருச்சியில் தியாகி இம்மானுவேல் சேகரின் 66 ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு தில்லைநகரில் உள்ள தி.மு.க. மாவட்ட அலுவலகத்தில் இம்மானுவேல் சேகரனின் திருவுருவப்படத்திற்கு கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிருவாகத்துறை அமைச்சருமான கே.என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இந்நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகரச் செயலாளரும் மாநகராட்சி மேயருமான அன்பழகன், பகுதி செயலாளர்கள் மோகன்தாஸ், இளங்கோ, போட்டோ கமால், கனகராஜ், மண்டலக் குழு தலைவர்கள் விஜயலட்சுமி, கண்ணன், துர்கா தேவி, டோல்கேட் சுப்பிரமணி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரியில் கஸ்தூரிபா சேவை மையம் சார்பாக 14 வது ஆண்டு காமராசர் முதல்வன் விருது 540 மாணவ, மாணவியருக்கு வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் விருது வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சியர் திருமதி.சாந்தி, கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி,மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முனைவர். பி.பழனியப்பன், மாவட்ட துணைச் செயலாளர் ரேணுகாதேவி, டி.என்.சி.இளங்கோவன் மற்றும் கழகத்தினர் இருந்தனர்.

முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆட்சியில் 28 மாதத்தில் சாதனை! மேற்கு மாம்பலம்

# காசி விஸ்வநாதர் கோவிலில் 1000-வது குடமுழுக்கு விழா!

## அமைச்சர் பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

சென்னை, செப்.12-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு பொறுப்பேற்றபின், தொன்மையான திருக்கோயில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்தப்பட்டு வருகிறது. அந்த வகையில், 1,000வது குடமுழுக்காக நேற்று முன்தினம் (10.09.2023) காலை நடைபெற்ற சென்னை, மேற்கு மாம்பலம், காசி விஸ்வ நாதர் திருக்கோயில் குடமுழுக்கு பெருவிழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, சமய பெரியோர்கள், ஆன்மிகவாதிகள், இறையன்பர்கள் மற்றும் பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

முன்னதாக, நேற்று (10.09.2023) அதிகாலை நாலாவது கால யாகசாலை வழிபாடும், அனைத்து யாக சாலை சிறப்பு வேள்வியும் நிறைவு பெற்றது. பின்னர் யாகசாலையிலிருந்து திருக்கலசங்கள் புறப்பட்டு, அனைத்து கோபுரங்கள் மற்றும் இராஜகோபுரத்திற்கு திருக்குட நன்னீராட்டு நடைபெற்றது. பின்னர், அனைத்து பரிவாரங்கள், மூலவர் மற்றும் உற்சவ மூர்த்திகளுக்கு நன்னீராட்டும், சிறப்பு திருமஞ்சனம், எழில்கோலம் மற்றும் பேரொளி வழிபாடும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள், குடமுழுக்கு பெருவிழாவில் பங்கேற்று சிறப்பித்த தவத்திரு ஆதீனங்கள், சமய பெரியோர்கள், உபயதாரர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பொன்னாடை அணிவித்து நினைவுப் பரிசு வழங்கி சிறப்பித்தார்.

இதில் அமைச்சர் பி.கே. சேகர்பாபு செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றபின், தொன்மை வாய்ந்த திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணிகள் மேற்கொள்ளவும், ஆகம விதிப்படி 12 ஆண்டுகள் முடிந்த பிறகு குடமுழுக்கு நடைபெற வேண்டிய திருக்கோயில்களுக்கு உடனடியாக திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்திடவும் நடவடிக்கைகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்கள். அந்த வகையில் குடமுழுக்கு 400 ஆண்டுகளுக்கு பிறகு திருவட்டாறு ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலுக்கும், 300 ஆண்டுகளுக்கு பிறகு காஞ்சிபுரம் மாவட்டம், சாத்தனஞ்சேரி, கரியமாணிக்க வரதராஜ பெருமாள் திருக்கோயிலுக்கும், 150 ஆண்டுகளுக்கு பிறகு இராணிப்பேட்டை மாவட்டம், தக்கோலம், கங்காதீஸ்வரர் திருக்கோயிலுக்கும், 100 ஆண்டுகளுக்கு பிறகு எண்ணற்ற திருக்கோயில்களுக்கும் இந்த ஆட்சியில் தான் குடமுழுக்கு விமரிசையாக நடைபெற்றுள்ளது.

**கிராமப்புற திருக்கோயில்கள்**

கிராமப்புற திருக்கோயில்கள் மற்றும் ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு திருப்பணிகள் மேற்கொள்ள ஆண்டுதோறும் தலா 1,000 என்ற எண்ணிக்கை 1,250 ஆகவும், நிதியுதவி தலா ரூ.1 லட்சம் என்பது ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டு இதுவரை 2,500 கிராமப்புற திருக்கோயில்களுக்கும் 2,500 ஆதிதிராவிடர்கள் பழங்குடியினர் வசிக்கின்ற பகுதியில் இருக்கின்ற திருக்கோயில்களுக்கு ரூ. 100 கோடி நிதியுதவியாக வழங்கப்பட்டுள்ளது.

முதலமைச்சர் அவர்கள் 1,000 ஆண்டுகள் முற்பட்ட தொன்மையான திருக்கோயில்களை புனரமைத்து திருப்பணி மேற்கொள்ள 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.100 கோடியும், 2023 24 ஆம் நிதியாண்டிற்கு ரூ.100 கோடியும் அரசு மானியமாக வழங்கியுள்ளார்கள். அதன்படி 2022 - 2023 ஆம் நிதியாண்டில் ரூ.140 கோடி மதிப்பீட்டில் 113 தொன்மையான திருக்கோயில்களும், 2023 24 ஆம் நிதியாண்டில் ரூ.150 கோடி மதிப்பீட்டில் 84 திருக்கோயில்களும் அரசு மானியம், திருக்கோயில் நிதி மற்றும் உபயதாரர்கள் பங்களிப்புடன் புனரமைத்து பாதுகாக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

ஒரு கால பூஜை திட்டத்தின் கீழ் பயன்பெற்று வந்த திருக்கோயில்களின் வைப்பு நிதி ரூ. ஒரு லட்சத்தை 2 இலட்சமாக உயர்த்தி அதற்கான நிதியுதவி ரூ.129.50 கோடியை ஒரே தவணையில் வழங்கியவர் நமது முதலமைச்சர் அவர்கள். மேலும், ஒரு கால பூஜை திட்டத்தில் 20222023 ஆம் நிதியாண்டில் 2,000 திருக்கோயில்களை இணைத்திட ரூ.40 கோடி வழங்கியதோடு, 20232024 ஆம் நிதியாண்டில் 2,000 திருக்கோயில்களை இணைக்க அரசு நிதியாக ரூ.30 கோடியும், இந்து சமய அறநிலையத்துறை பொது நல நிதியாக ரூ.10 கோடியும் வழங்க உத்தரவிட்டுள்ளார். இதன் மூலம் 15,000 திருக்கோயில்கள் பயன்பெற்று வருகின்றன. ஒரு கால பூஜைத் திட்டத்தில் திருக்கோயில்களில் பணிபுரியும் அர்ச்சகர்களுக்கு மாதாந்திர ஊக்கத்தொகையாக ரூ.1,000 வழங்கப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற நாள் முதல் இன்று வரை 1,030 திருக்கோயில்களுக்கு குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா மகிழ்ச்சியோடு நிறைவடைந்துள்ளது. வெகு விரைவில் 1,030 திருக்கோயில்கள் குடமுழுக்கு நன்னீராட்டு பெருவிழா நடைபெற்ற புகைப்படங்கள் அடங்கிய சிறப்பு மலரை விரைவில் இந்து சமய அறநிலையத்துறை வெளியிடும். இந்த நன்னீராட்டு பெருவிழாவில் பங்கேற்று பொருளுதவி அளித்த உபயதாரர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களும், அரசு உயர் அலுவலர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் பி.கே.சேகர்பாபு தெரிவித்தார்.

இப்பெருவிழாவில் கௌமார மடம், சிரவை ஆதீனம் தவத்திரு குமரகுருபர சுவாமிகள், திருக்கயிலாய பரம்பரை வேளக்குறிச்சி ஆதீனம் சீர்வளர்சீர் சத்ய ஞான மகாதேவ தேசிக பரமாசாரிய சுவாமிகள், சிவநெறிச் செம்மல் கே.பிச்சை குருக்கள், சிவபுரம் கல்வி அறக்கட்டளை நிறுவனர் ஏ.வி.சுவாமிநாத சிவாச்சாரியார், பழநி, தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் சிவாச்சாரியார் செல்வ சுப்பிரமணிய குருக்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் மயிலை த.வேலு, ஜெ.கருணாநிதி, இந்து சமய அறநிலையத்துறை சிறப்பு பணி அலுவலர் ஜெ.குமரகுருபரன், ஆணையர் க.வீ. முரளீதரன், அரசு உயர் அலுவலர்கள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

# திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் இல.பத்மநாபன் அறிவிப்பு!



திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.கழகத்திற்குட்பட்ட செயற்குழுக் கூட்டம் இன்று (12.09.2023-செவ்வாய்) மாலை 5.30 மணியளவில் திருப்பூர், தாராபுரம் சாலை, பலவஞ்சிபாளையத்தில் அமைந்துள்ள மாவட்டக் கழக அலுவலகமான, "கலைஞர் அறிவாலயம்", "தளபதி அரங்கில்" மாவட்டக் கழக அவைத்தலைவர் இரா.ஜெயராமகிருஷ்ணன் தலைமையில், எனது (இல.பத்மநாபன்) முன்னிலையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் சிறப்பு அழைப்பாளர்களாக கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், கழக மகளிர் அணி துணைச் செயலாளர், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் என்.கயல்விழி செல்வராஜ் கலந்து கொள்ள உள்ளார்கள்.

அதுசமயம், மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் தவறாது கூட்டத்தில் கலந்து கொண்டு கூட்டத்தை சிறப்பிக்க வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன்.

**குறிப்பு :** மாவட்டக் கழகத்தின் சார்பு அணிகளின் தலைவர், துணைத்தலைவர், அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாது கலந்து கொள்ள வேண்டும்.

**பொருள் :** செப்டம்பர் 17 தி.மு.கழக முப்பெரும் விழா குறித்து. வருகின்ற 24.09.2023 அன்று நடைபெறும் தி.மு.கழக மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பாசறை கூட்டம் குறித்து. கழக ஆக்கப் பணிகள் .

**இல.பத்மநாபன்,**
செயலாளர்
திருப்பூர் தெற்கு மாவட்ட தி.மு.க.



மயிலாடுதுறை மாவட்டம் செம்பனார்கோயில் மத்திய ஒன்றியம் மேமாத்தூர் ஊராட்சியில் இருந்து அ.தி.மு.க.வைச் சேர்ந்த பிரசாந்த், கிருஷ்ணன், குமார் ஆகியோர் தலைமையில் அக்கட்சியைச் சேர்ந்த 15பேர் அ.தி.மு.க.வில் இருந்து விலகி மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. முன்னிலையில் தி.மு.க.வில் இணைந்தனர். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள் எம்.அப்துல்மாலிக், அமுர்த.விஜயகுமார், பி.எம்.அன்பழகன், தகவல் தொழில் நுட்ப அணி தஞ்சை மண்டல பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர், மாவட்ட இளைஞர் அணி மாவட்ட அமைப்பாளர் எம்.கே.மருதமுத்து, மாவட்ட விவசாயத் தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் செந்தில் மற்றும் பலர் உள்ளனர்.

கடலூர் மாவட்டத்தில் விபத்தில்

# உயிரிழந்த சிறுமியின் குடும்பத்திற்கு ரூ.2 லட்சம் நிதி!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப்.12-

கடலூர் மாவட்டம், திட்டக்குடி வட்டம், மருதத்தூர் கிராமத்தில் உள்ள கோவிலில் நேற்று முன்தினம் (10-09-2023) காலை கும்பாபிஷேகம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, கோவிலுக்கு அருகில் அமைந்துள்ள கட்டிடத்தின் வெளிப்புற மேற்கூரை எதிர்பாராதவிதமாக ஸ்ரீமுஷ்ணம் வட்டம், காவனூர் கிராமத்தைச் சேர்ந்த செல்வி.சுதந்திரதேவி, (வயது 15) என்பவர் மீது இடிந்து விழுந்ததில், அவருக்கு காயம் ஏற்பட்டு சிகிச்சைக்காக வேப்பூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லும் வழியில் உயிரிழந்தார் என்ற துயரமான செய்தியினைக் கேட்டு மிகுந்த வருத்தமடைந்தேன்.

உயிரிழந்த செல்வி.சுதந்திரதேவியின் பெற்றோருக்கும், உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், ஆறுதலையும் தெரிவித்துக் கொள்வதோடு அவரது குடும்பத்தினருக்கு இரண்டு இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க உத்தரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள அறிவிப்பில் கூறியுள்ளார்.

காங்கேயம் படியூரில் பி.எல்.ஏ. 2 பயிற்சி

# பாசறைக் கூட்டத்திற்கான ஆலோசனைக் கூட்டம்!

## நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளர் கே.ஆர்.என்.ராஜேஸ்குமார் எம்.பி. அறிவிப்பு!

நாமக்கல், செப். 12 -



நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சரும், கழகத் தலைவருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் காங்கேயம் படியூரில், செப்டம்பர் 24 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 10.00 மணி அளவில் மேற்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின்" வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) "பயிற்சி பாசறைக் கூட்டம் நடைபெற உள்ளது. இதற்கான ஆலோசனைக் கூட்டம் கீழ் காணும் அட்டவனைபடி வனத்துறை அமைச்சர் டாக்டர். மா. மதிவேந்தன், சட்டமன்ற உறுப்பினர்கள் நாமக்கல் பெ. இராமலிங்கம், சேந்தமங்கலம் கே. பொன்னுசாமி ஆகியோரின் முன்னிலையில் நடைபெறும் என நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஸ் குமார் அறிவித்துள்ளார்.

அதன்படி, நாமக்கல் சட்ட மன்றத் தொகுதிக்கான கூட்டம் நாளை (13.09.2023 - புதன்கிழமை) மாலை 5 மணிக்கு திருச்சி ரோடு நளா ஹோட்டல், சேந்தமங்கலம் சட்டமன்றத் தொகுதிக்கான கூட்டம். 14.09.2023 வியாழக்கிழமை 5 மணிக்கு சேந்தமங்கலம் வசந்தமஹால், இராசிபுரம் சட்டமன்ற தொகுதிக்கான கூட்டம் 15.09.2023 வெள்ளிக்கிழமை மாலை 5 மணிக்கு இராசிபுரம் அரிமா மண்டபம் ஆகிய இடங்களில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்திற்கு தலைமைக் கழக நிர்வாகிகள், மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், பொறுப்பாளர், வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA 2) என அனைவரும் அவரவர்க்குட்பட்ட சட்டமன்ற தொகுதிகளில் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக் கூட்டம்!

மாநிலச் செயலாளர் ப.ராணி பங்கேற்பு!

திருச்செங்கோடு, செப். 12-

நாமக்கல் மேற்கு மாவட்ட தி.மு.க. மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி ஆலோசனைக்கூட்டம் திருச்செங்கோடு மேற்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு மாநில மகளிர் தொண்டர் அணி செயலாளர் நாமக்கல் ப.ராணி தலைமை தாங்கினார். மாநில மகளிர் சமூக வலைதாள பொறுப்பாளர் திருநங்கை அ.ரியா, மாவட்ட துணை அமைப்பாளர் எம்.சாந்தி, மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் எஸ்.ஜோதி, மாவட்ட மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் எஸ்.ராதிகா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்தில் முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் நூற்றாண்டு பிறந்தநாள் விழாவையொட்டி மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பாக மாவட்ட முழுவதும் 25000 க்கும் மேற்பட்ட மகளிர் உறுப்பினர்கள் சேர்க்கப் பட வேண்டும்,

நாமக்கல் மேற்கு மாவட்ட மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி சார்பாக மாவட்டம் முழுவதும் மகளிர் பாசறைக்கூட்டம் நடத்தபட வேண்டும்,

நாமக்கல் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களில் மகளிர் அணி மற்றும் மகளிர் தொண்டர் அணி நிர்வாகிகள் நியமனம் செய்வது, கடந்த 06.06.2023 அன்று உடல்நிலை குறைவால். இறந்த சி.வசந்தா அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக இரங்கல் தீர்மானம் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இக்கூட்டத்தில் மகளிர் அணி, மகளிர் தொண்டர் அணி தலைவர்கள், துணை தலைவர்கள் மற்றும் துணை அமைப்பாளர் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## எஸ். ஸ்ரீதர்

செப்டம்பர் 12 (2020)



தனது இளமைக் காலம் முதலே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

நாகப்பட்டினம் நகரத்தில் வட்ட பிரதிநிதியாகவும், நகர இளைஞர் அணி அமைப்பாளராகவும், மாவட்ட நெசவாளர் அணி அமைப்பாளராகவும் பொறுப்பு வகித்தவர்.

நாகப்பட்டினம் நகர் மன்ற உறுப்பினராக பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த பல்வேறு போராட்டங்களில் கலந்து கொண்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஈரோடு தெற்கு மாவட்ட கழக மருத்துவ அணி சார்பில் டாக்டர் விவேக் ஏற்பாட்டில் ஆங்கில கருத்தரங்கம் மாநில மருத்துவணி துணை தலைவர் டாக்டர் செந்தில்நாதன் தலைமையில் டாக்டர்கள் கோகுல் கிருபாசங்கர், அண்ணாமலை முன்னிலையில் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். கருத்தரங்கில் தொழில் துறை, மருத்துவ சேவை, மகளிர் மேம்பாட்டில் திராவிட மாடல் குறித்து டாக்டர்கள் எழிலன் நாகநாதன், கனிமொழி என்.வி.என்.சோமு, ஊடகவியலாளர் கவிதா முரளிதரன் ஆகியோர் கருத்துரை வழங்கினார்கள். நிகழ்வில் துணை மேயர்கள் தஞ்சாவூர் அஞ்சுகம் பூபதி, ஈரோடு வி.செல்வராஜ் மாநில நிர்வாகிகள் எம்.கந்தசாமி, வி.சி. சந்திரகுமார், வீரமணி, பொன்னுச்சாமி, மு.சுப்பிரமணியம் க.சின்னையன் கே.பி.சாமி, சுப்பிரமணியம், திருவாசகம் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம் பர்லியார் ஊராட்சியில்

# ரூ.33.59 லட்சத்தில் கட்டி முடிக்கப்பட்ட பணிகள் - ரூ.1.35 கோடியில் வளர்ச்சி திட்டப் பணிகள்!

## அமைச்சர் கா.இராமச்சந்திரன் திறந்துவைத்து பார்வையிட்டார்!

சென்னை, செப்.12-

நீலகிரி மாவட்டம், குன்னூர் ஊராட்சி ஒன்றியம், பர்லியார் ஊராட்சி பகுதியில், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில், 2021-2022 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி திட்டத்தின் கீழ் ரூ.16.72 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட கரன்சி அங்கன்வாடி மைய கட்டடத்தினையும், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.16.87 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட பர்லியார் நியாயவிலைக் கடை என மொத்தம் ரூ.33.59 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்டுள்ள பணிகளை, பொதுமக்களின் பயன்பாட்டிற்காக, சுற்றுலாத்துறை அமைச்சர் கா. ராமச்சந்திரன் 09.09.2023 அன்று திறந்து வைத்து பார்வையிட்டார்.

அதனை தொடர்ந்து, சுற்றுலாத்துறை அமைச்சர், பர்லியார் ஊராட்சிக்குட்பட்ட கரன்சியில் 15-வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் ரூ.2 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட அங்கன்வாடி மைய கட்டிட தடுப்புச்சுவரினையும், வண்டிசோலை ஊராட்சியில் முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ரூ.1.01 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் சோலாடா மட்டம் சாலை பணியினையும், பேரட்டியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்;ச்சி திட்டத்தின் கீழ் ரூ.1.61 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட நூலக பழுது பார்ப்பு பணிகளையும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து ரூ.10 இலட்சம் மதிப்பில் கல்குழியில் கட்டப்பட்டு வரும் கிணற்றினையும், எடப்பள்ளி ஊராட்சியில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் ரூ.10.95 இலட்சம் மதிப்பில் இந்திராநகர் பகுதியில் கட்டப்பட்டு வரும் சேமிப்பு கிடங்கினையும்,

ஆரக்கொம்பையில் ஜல் ஜீவன் மிஷன் திட்டத்தின் கீழ் ரூ.12.12 இலட்சம் மதப்பில் நடைபெற்று வரும் குடிநீர் குழாய் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூ.1.35 கோடி மதிப்பில் நடைபெற்று வரும் பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், சுற்றுலாத்துறை அமைச்சர், பேரட்டி ஊராட்சியில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தின் கீழ் ரூ.5.43 இலட்சம் மதிப்பில் முடிக்கப்பட்ட ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி சமையல் கூடத்தினை திறந்து வைத்து, பேரட்டி ஊராட்சி பகுதிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் ரூ.7.2 இலட்சம் மதிப்பில் கழிவுகள் சேகரிக்கும் பிக்கப் வாகனத்தினை கொடியசைத்து துவக்கி வைத்தார்.

பின்னர் சுற்றுலாத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை தீட்டி சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, தமிழக அரசால் காலை உணவு திட்டம் போன்ற பல்வேறு சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் வாயிலாக, குழந்தைகள் பசியின்றி கல்வி கற்க வேண்டும் என்ற நோக்கத்தில் கடந்த ஆண்டு அண்ணா பிறந்த நாளான 15.09.2022 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முதலமைச்சரின் காலை உணவு திட்டம் என்ற ஒரு சிறப்பான திட்டத்தினை தொடங்கி வைத்தார். அதனை தொடர்ந்து நீலகிரி மாவட்டத்தில் கூடலூர், ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஸ்ரீமதுரை ஊராட்சி ஒன்றிய தொடக்க பள்ளியில் 16.09.2022 அன்று இத்திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. இத்திட்டம் மிகவும் பயனுள்ள திட்டம் என்கின்ற காரணத்தினால்;, மாநிலம் முழுவதும் விரிவாக்கம் செய்யப்பட்டதன் மூலம் 1 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவிகள் பயனடைந்து வருகின்றனர்.

மேலும், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் எல்லோருக்கும் எல்லாம் கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தில் பொதுமக்களின் அடிப்படை வசதிகளை மேம்படுத்த அதிக அளவில் முன்னுரிமை அளித்து பல்வேறு திட்டங்களின் வாயிலாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள்.

அதனடிப்படையில், நமது மாவட்டத்தில் பொது மக்களின் அடிப்படை வசதிகளுக்கு முன்னுரிமை அளித்து, பணிகள் மேற்கொள்ளும் விதமாக பேரூராட்சிகள், ஊராட்சிகள்; உள்ளிட்ட பல்வேறு இடங்களில் வளர்ச்சி திட்ட பணிகள் நடைபெற்று வருகிறது.

நேற்றைய தினம் குன்னூர் வட்டம் உலிக்கல் பேரூராட்சி, மேலூர், உபதலை ஆகிய ஊராட்சி பகுதிகளிலும், இன்று பர்லியார், எடப்பள்ளி, வண்டிச்சோலை, பேரட்டி ஆகிய ஊராட்சிப்பகுதிகளில் நடைபெற்று வரும் பணிகள் ஒப்பந்தக்காரர்கள் சரியான முறையில் செய்கிறார்களா என்பதனை நேரில் ஆய்வு செய்யப்பட்டது. அதேபோல், முடிக்கப்பட்ட பணிகளும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்டது.

குறிப்பாக, குன்னூர் ஊராட்சி ஒன்றியம், பேரட்டி ஊராட்சியில் 2021-2022, 2022-2023 ஆகிய ஆண்டுகளில் சுமார் ரூ.1.57 கோடி மதிப்பில் பல்வேறு பணிகள் முடிக்கப்பட்டும், நடைபெற்றும் வருகிறது என சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.உமாமகேஸ்வரி, குன்னூர் வருவாய் கோட்டாட்சியர் பூஷணகுமார், குன்னூர் வட்டாட்சியர் கனிசுந்தரம், குன்னூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மோகனகுமாரமங்கலம், ஆறுமுகம், பர்லியார் ஊராட்சி மன்ற தலைவர் சுசீலா, பேரட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஜெகதீசன் உட்பட பலர் உடனிருந்தனர்.

'இன்னுயிர் காப்போம்' திட்டம் மூலம்

# 2 ஆண்டுகளில் 1.7 லட்சம் பேருக்கு சிகிச்சை!

## சுகாதார துறை செயலாளர் ககன் தீப் சிங் பேடி தகவல்!

சென்னை, செப்.12 -

சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் தமிழ்நாடு - புதுச்சேரி மாநிலங்களுக்கு இடையேயான அவசர கால சிகிச்சை பிரிவில் பணி புரியும் மருத்துவர்களுக்கான இரண்டாம் ஆண்டிற்கான கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் தமிழகம் மற்றும் பிற மாநிலங்களை சேர்ந்த முதுநிலை மருத்துவம் பயிலும் மாணவர்கள் 260 பேருக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். மக்கள் மற்றும் நல்வாழ்வு துறை செயலாளர் ககன் தீப் சிங் பேடி, குத்து விளக்கு தமிழ்நாட்டில் ஏற்றி தொடங்கி வைது பேசுகையில், 'தமிழகத்தில் உள்ள அரசு மருத்துவமனைகளில் அவசரகால சிகிச்சை பிரிவு என்பது ஒரு தூண் போல திகழ்ந்து வருகிறது.

தமிழ்நாட்டில் சாலை விபத்துகளில் ஒருவர் பாதிக்கப்பட்டால் அவருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்கும் விதமாகதான் இன்னுயிர் காப்போம் திட்டம் தமிழக அரசால் தொடங்கபட்டது. இத்திட்டத்தின் மூலமாக கடந்த 2 ஆண்டுகளில் 5.7 சதவீதம் இறப்புகள் என்பது குறைந்துள்ளது. 1.7 லட்சம் சிகிச்சைகள் அரசு மருத்துவமனைகளிலும் வெற்றிகரமாக அளிக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் தான் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் சுகாதாரத்துறை என்பது முதன்மை இடத்தில் அங்கம் வகித்து வருகிறது' என்றார்.

நிகழ்ச்சியில் ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் முதல்வர் தேரணி ராஜன், துணை முதல்வர் கவிதா, சென்னை மருத்துவ கல்லூரி தலைவர் பவானி, அவசர சிகிச்சை பிரிவு துறையின் தலைவர் கௌதமி மற்றும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் அவசர சிகிச்சை மருத்துவ சங்கத்தின் தலைவர் முகமது அனீஸ் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி ஊராட்சி ஒன்றியம், அழியாநிலை ஊராட்சியில், அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ், பல்வேறு புதிய திட்டப் பணிகளை, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் 5.9.2023 அன்று அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். உடன் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.நா.கவிதப்பிரியா, அறந்தாங்கி ஒன்றியக்குழுத் தலைவர் திருமதி. மகேஸ்வரி சண்முகநாதன், வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேலன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

# தமிழ்நாட்டில் 7 நாட்களுக்கு மழை!

சென்னை, செப். 12 -

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்ட செய்திக்குறிப்பில் தெரிவித்திருப்பதாவது, மேற்கு திசை காற்றின் வேக மாறுபாடு காரணமாக, நேற்று (11.09. 2023) தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்தது.

12.09.2023 முதல் 16. 09.2023 வரை: தமிழ்நாடு, புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதிகளில் ஒருசில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். சென்னையை பொறுத்தவரை அடுத்த இரு தினங்களுக்கு வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் ஒருசில இடங்களில் இடி மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே! பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களுக்கான தேடுதல் குழுவை அமைக்க கவர்னருக்கு அதிகாரமே இல்லையாமே ?

**பெரியதம்பி : ஆமாம் தம்பி! உயர்கல்வித் துறையில் நீண்ட அனுபவம் உள்ளவர்கள், ஆளுநருக்கு அதிகாரம் இல்லை என்றே கருத்து தெரிவிக்கிறார்கள்.**

**இல்லாத அதிகாரம் தனக்கு இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு, தன்னையும் ஏமாற்றி, மற்றவர்களையும் ஏமாற்றிட எண்ணுபவரே இங்கே ஆளுநர்.**

**'குரங்குகைப் பூமாலை' என்பார்களே; அதுதானோ இது !**

கரூர் மாவட்டம்

# மாயனூரில் மாவட்ட அரசு மாதிரிப் பள்ளி!

## மாவட்ட ஆட்சித் தலைவர் தொடங்கி வைத்தார்!

கரூர், செப். 12 -

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் உத்தரவின்படி மாவட்ட அரசு மாதிரி பள்ளி கரூர் மாவட்டம் மாயனூரில் துவக்கி வைக்கப்பட்டது.

கரூர் மாவட்டம் மாயனூர் கரூர் அரசு மாதிரிப் பள்ளியை மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த. பிரபுசங்கர், துவக்கி வைத்தார். சட்டமன்ற உறுப்பினர்கள் க.சிவகாம சுந்தரி (கிருஷ்ணராயபுரம்), இரா. மாணிக்கம் ( குளித்தலை). ஆர்.இளங்கோ ஆகியோர் முன்னிலை வைத்தார்கள்.

பின்னர் மாவட்ட ஆட்சித் தலைவர் கூறியதாவது:-

முதலமைச்சர் அவர்கள் பள்ளி கல்வித்துறையை மேம்படுத்தும் விதமாக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். அதன் அடிப்படையில் மாவட்டங்கள் தோறும் அரசு மாதிரி பள்ளியினை சென்ற வருடம் துவக்கி வைத்தார்.

அதேபோல் இவ்வாண்டு முதல் கரூர் மாவட்டத்தில் செயல்படவுள்ளது. மாயனூர் ஆசிரியர் பயிற்சி பள்ளியில் இப்பள்ளியை துவக்கி வைப்பதன் காரணம், மாயனூர் என்ற இடம் அகன்ற காவிரி பாயும் இந்த மண்ணில் மாணவர்களுக்கு கல்வி கற்கும் உகந்த சூழ்நிலையை உருவாக்கும் வகையில் இவ்விடம் அமைந்துள்ளது.

அது மட்டுமல்லாமல் மாவட்டத்தின் மையப்புள்ளியாகவும், தேசிய நெடுஞ்சாலையில் இருக்கிறது. மாணவர்கள் வந்து செல்ல வசதியாகவும் இருக்கும் ஆகவேதான் இவ்விடத்தை நாங்கள் தேர்வு செய்துள்ளோம். மாயனூர் ஆசிரியர் பள்ளியில் ஆசிரியர்களுக்கு கல்வி கற்றுக் கொடுத்த அதே இடத்தில் தேர்வு செய்து மாணவர்களுக்கு கல்வி அறிவை செலுத்துவதன் அடிப்படையில் இந்த மாதிரிப் பள்ளி இங்கே உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கே கட்டடம் கட்டுவதற்காக முதலமைச்சர் அவர்கள் ரூ.2.25 கோடி மதிப்பில் நிதிகளை ஒதுக்கீடு செய்துள்ளார். அதற்காக மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்விடம் கல்விக் கற்றலுக்கு உகந்த பள்ளியாக இருப்பதில் எவ்வித ஐயமும் இல்லை. இங்கே பல்வேறு உட்கட்டமைப்பு வசதிகளுடன் கட்டடங்களை தயார் படுத்தி உள்ளோம்

மேலும், யோகா, வேலை வாய்ப்புகளுக்கான திறன் பயிற்சியும், ஓவியம் பயிற்சி போன்ற நற்பண்புகளை கற்றுக் கொடுக்கப்படும். இங்கே பயிலக்கூடிய மாணவர்களுக்கு ஒரே வேண்டுகோள் அடுத்த வருடம் இங்கே பயிலக்கூடிய மாணவர்கள் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரியில் அதிக அளவில் சேர வேண்டும். அவ்வாறு சேர்வதற்கான பயிற்சிகளை நீங்கள் இப்பொழுதே தயார் படுத்திக் கொள்ள முன் வர வேண்டும் .

இந்த மாதிரி பள்ளியில். பள்ளிப்படிப்பு முடித்து வெளியேறும் போது பல்வித நற்பண்புகளை பெற்றிருக்க வேண்டும். கல்வி கற்க வேண்டிய நேரத்தில் கல்வியையும், விளையாடும் நேரத்தில் விளையாட்டுகளையும் தேர்வு செய்து படிக்க வேண்டும். கல்வியை சுமையாக கருதாமல் ரசித்து விரும்பி படிக்க வேண்டும். நீங்கள் அகன்ற காவேரி எப்படி கம்பீரத்துடன் மக்களின் வாழ்க்கை வளத்தை தருவது போல் மாணவர்களாகிய நீங்கள் கல்வி வளத்தைப் பெற்று வாழ்வில் முன்னேற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர்.த. பிரபு சங்கர் தெரிவித்துள்ளார்.

பின்னர் மாணவ - மாணவியருக்கு பாட நூல்களை வழங்கினார்.

இந்நிகழ்வில் கிருஷ்ணராயபுரம் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் சுமித்ரா தேவி, மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் சுமதி, குளித்தலை வருவாய் கோட்டாட்சியர் கருணாகரன், தனித்துணை ஆட்சியர் சைபுதீன். மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் சண்முக வடிவேல், மாதிரி பள்ளி மண்டல ஒருங்கிணைப்பாளர் தீனதயாள், மாதிரி பள்ளி தலைமையாசிரியர் விஜயலட்சுமி மற்றும் அரசு பள்ளி மேலாண்மை குழு உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# சமூக வலைதளத்தில் வைரலாவதற்கு காரமான சிப்ஸ் சாப்பிட்ட சிறுவன் பலி!

பாஸ்டன்: செப். 12 –

சமீபத்தில் ட்விட்டர், இன்ஸ்டாகிராம் உள்ளிட்ட சமூக வலைதளங்களில் 'ஒன் சிப் சேலஞ்ச்' என்ற சவால் ஒன்று டிரெண்ட் ஆகி வருகிறது. இதில் 'பாகுய் (Paqui) என்ற உலகின் மிக காரமான சிப்ஸ் ஒன்றை சாப்பிட்டு அதனை வீடி யொவாக பதிவு செய்து பகிர வேண்டும். இந்த சிப்ஸ் மிக அதிகமான காரத்துடன் உரு வாக்கப்பட்டது. அமெரிக்காவின் மசாசூசெட்ஸ் மாகாணத்தைச் சேர்ந்த. ஹாரிஸ் வாலோபா என்ற 14 வயது சிறுவன், இந்த 'ஒன் சிப் சேலஞ்ச்' டிரெண்டில் பங்கேற்று வைரலாக விரும்பி இந்த சிப்ஸை தனது பள்ளியில் சாப்பிட்டுள்ளார். இதனால் சில நொடிகளிலேயே கடுமையான வயிற்று வலி ஏற்பட்டு துடித்துள்ளார். குடும்பத்தினர் அவரை மருத்துவமனைக்கு போகும் வழியிலேயே மயக்கமடைந்த ஹாரிஸை, மருத்துவமனையில் பரிசோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கெனவே இறந்துவிட்டதாக தெரிவித்துள்ளனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## சி.என்.ஆர். (எ) சி.என்.ரத்தினம்

செப்டம்பர் 12 (2019)



வடசென்னை பகுதியில் கழகம் வளர்த்தவர்களில் ஒருவர்.

ஆர்.கே.நகர் பகுதிச் செயலாளர், தலைமைச் செயற்குழு உறுப்பினர் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி எதிர்ப்பு போராட்டம், இலங்கை தமிழர் ஆதரவு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தியாகி இமானுவேல் சேகரன் நினைவு தினத்தை முன்னிட்டு திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாவட்ட அலுவலகத்தில் திருச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளரும் தமிழக பள்ளிக்கல்வித்துறை அமைச்சருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் இமானுவேல் சேகரன் உருவபடத்திற்க்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நிகழ்வில் திருச்சி மாநகர செயலாளர் மதிவாணன் மற்றும் மாவட்ட மாநகர நிர்வாகிகள், சேகரன் வண்ணை அரங்கநாதன், கோவிந்தராஜன், லீலாவேலு, மூக்கன், நீலமேகம், ஜெகதீசன், சிந்துஜா, தனசேகரன் பழனியாண்டி, முத்தமிழ்கருணாநிதி, மாவட்ட, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர் கழக நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் தெற்கு மற்றும் வடக்கு மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்பாளர் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான நேர்காணல் விழுப்புரம் கலைஞர் அறிவாலயம் தளபதி அரங்கில் நடைபெற்றது. கழகத் துணைப் பொதுச்செயலாளர், உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி நேர்காணலுக்கு வந்தவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டு வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டார். அமைச்சர் கே.எஸ்.மஸ்தான், நா.புகழேந்தி எம்.எல்.ஏ, மாநில இளைஞர் அணி துணை செயலாளர்கள் ப. அப்துல் மாலிக் , எஸ்.ஜோயல், ஜி.பி.இராஜா, ஈரோடு பிரகாஷ், இளையராஜா, பிரபு, சீனுவாசன், இரா. ஜனகராஜ், செ. புஷ்ப ராஜ் மற்றும் பலர் கலந்து கொண்டனர். மாநில தீர்மானக்குழு உறுப்பினர் செஞ்சி சிவா, மாவட்ட துணைச் செயலாளர் தயா. இளந்திரையன், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள் செ. தினகரன், கண்ணன் ஆனந்த், துணை அமைப்பாளர்கள் டி கே. பி. இரமேஷ், ராயல் அன்பு, T. D. J இராஜ வேல், எஸ். பாலாஜி, ஏ. சி. கே. பிரேம், கலைவாணன், தேவேந்திரன், உதயகுமார், பாபு, அண்ணாமலை, விஜயகுமார் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# ஜி 20 உச்சி மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்!

**புதுடெல்லி, செப்.12-**

**ஜி20 உச்சி மாநாட்டில் பல்வேறு விவகாரங்கள் தொடர்பாக தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு :-**

ஜி20 அமைப்பானது அனைத்து வகையான தீவிரவாதத்தையும், தீவிரவாத அமைப்புகளுக்கு பாதுகாப்பான புகலிடம் வழங்குபவர்கள், நிதி உதவி செய்பவர்களையும் கடுமையாக கண்டிக்கிறது. மேலும் தீவிரவாதத்தை ஒழிக்க, நிதி மற்றும் அரசியல் ரீதியாக சர்வதேச ஒத்துழைப்பின் செயல்திறனை அதிகரிக்கும் முயற்சிகளை வலுப்படுத்தவும் அழைப்பு விடுக்கிறது. அணு ஆயுதம் பயன்படுத்துவதையோ, அணு ஆயுத தாக்குதல் தொடர்பாக மிரட்டுவதையோ ஏற்க முடியாது

உக்ரைன் - ரஷ்யா போருக்கு பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும்

கிரிப்டோ கரன்சிகளை ஒழுங்குபடுத்துவதற்கான உலகளாவிய கட்டமைப்பை அனைத்து நாடுகளும் உடனடியாக செயல்படுத்துவது.

2030க்குள் பசுமை இல்ல வாயுக்கள் வெளியிடுதல் 43 சதவீதம் அளவுக்கு குறைக்க கவனம் செலுத்த வேண்டும்.

செயற்கை நுண்ணறிவுக்கான சர்வதேச விதிகள் வகுக்கவும், பாதுகாப்பான, நம்பகமான, பொறுப்புணர்வு மற்றும் அனைவரையும் உள்ளடக்கிய டிஜிட்டல் பொது உள்கட்டமைப்பு (டிபிஐ) ஏற்படுத்தவும் சர்வதேச ஒத்துழைப்பை ஊக்குவிக்க வேண்டும்.

பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் உள்ளவர்கள் உட்பட அனைவரையும் உள்ளடக்கிய, சமத்துவமான, உயர்தர கல்வி மற்றும் திறன் பயிற்சியை உறுதிப்படுத்த வேண்டும். கற்பவர்கள் அனைவரும் டிஜிட்டல் தொழில்நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கான வசதிகளை பெற வேண்டும். உயர்தர தொழில்நுட்பம், தொழிற்கல்வி மற்றும் பயிற்சிக்கான அணுகலை விரிவுபடுத்த வேண்டும்.

பொருளாதார வளர்ச்சிக்கான முடிவுகள் எடுக்கும் இடத்தில் பெண்களுக்கு முக்கியத்துவம் தரப்பட வேண்டும். பாலின இடைவெளியைக் குறைத்து சமமான வாய்ப்புகளை வழங்கி பெண்களை ஊக்குவிக்க வேண்டும்.

பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தவும், ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கவும், மேக்ரோ பொருளாதாரம் மற்றும் நிதி ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்கும் நன்கு அளவீடு செய்யப்பட்ட பணவியல், நிதி, நிதி மற்றும் கட்டமைப்புக் கொள்கைகளின் அவசியத்தை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

பாரீஸ் பருவநிலை ஒப்பந்தத்தின்படி, உலக வெப்பமயமாதல் குறைப்பு இலக்குகளை அடைவதற்கான உலகளாவிய நடவடிக்கைகள் போதுமானதாக இல்லை. இதில் அனைத்து நாடுகளும் தனித்தனியாக தீவிர கவனம் செலுத்த வேண்டும்.

ஊழலை ஜி20 அமைப்பு ஒருபோதும் சகித்துக் கொள்ளாது. ஊழலை ஒழிக்க சட்ட ரீதியான சர்வதேச ஒத்துழைப்பை வலுப்படுத்த வேண்டும்.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

# பொத்தனூர் அ.தி.மு.க., பா.ஜ.க. நிர்வாகிகள் 50 பேர் கழகத்தில் இணைந்தனர்!

## மாவட்டச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில்

நாமக்கல் செப். 12

நாமக்கல் மேற்கு மாவட்டம் கபிலர்மலை ஒன்றியம் பொத்தனூர் பேரூர் அ.தி.மு.க. மற்றும் பா.ஜ.கவை சேர்ந்த நிர்வாகிகள் பொத்தனூர் பேரூர் திமுக செயலாளர் கருணாநிதி ஏற்பாட்டில் நாமக்கல் மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர் எஸ்.எம்.மதுரா செந்தில் முன்னிலையில் கழகத்தில் இணைந்தனர்.

கபிலர்மலை அ.தி.மு.க. ஒன்றிய மாணவரணி இணைச் செயலாளர் பிரபாகரன் தலைமையில் பொத்தனூர் இளைஞர் பாசறை மற்றும் அம்மா பேரவை சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் பாஜகவை சேர்ந்த நிர்வாகிகள் பிரகாஷ், ஹரிஷ், சூர்யா, பாண்டி, கிஷோர், ராஜாராம், உசேன், சங்கர் கார்த்தி, தினேஷ், திருநாவுக்கரசு, பாண்டி, ராஜகணபதி, சவுந்தர்ராஜன், துரைராஜ், மணிகண்டன், மோகன்ராஜ், குமார், வேல்முருகன் உள்ளிட்ட 25க்கும் மேற்பட்ட இளைஞர்கள் தி.மு.க.வில் இணைந்தனர்.

30 - ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

12.09.2023



க.வீரைய்யா Ex,MP.

தந்தை பெரியாரிடம் பயின்று
அண்ணாவின் லட்சிய தீபத்தை தாங்கி பிடித்து
கலைஞரோடு ஒன்றாக பயணித்து
தளபதியின் உழைப்புக்கு உயர்வு தந்து
கழக வழியில் தடம் பிறழாமல்
எங்களுக்கு வழிகாட்டிய கலங்கரை விளக்கே
காலமெல்லாம் உங்கள் நெறியில்....

தலைவர் தளபதியின்
தலைமையில்
என்றைக்கும் இயக்கம் காப்போம் உங்கள் வழியில்...

மு.க.இராமகிருஷ்ணன்
ஒன்றிய கழகச் செயலாளர்,மாவட்ட கவுன்சிலர்

Dr.மு.க.முத்துக்கருப்பன் M.B.B.S., DMRD., MDRD.,
மாவட்ட மருத்துவரணி அமைப்பாளர்

க.வீரைய்யா Ex,MP. குடும்பத்தினர்கள்
புதுக்கோட்டை

## அரியலூர் மாவட்டம்

# கரைவெட்டி பறவைகள் சரணாலயத்தில் ஆய்வு!

## அமைச்சர்கள் மா.மதிவேந்தன் - சா.சி.சிவசங்கர் மேற்கொண்டனர்!

அரியலூர்,செப், 12-

அரியலூர் மாவட்டம், கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் மேலகருப்பூர் ஊராட்சியில் அரியலூர் வனச்சரக புதிய நாற்றாங்காலினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா.மதிவேந்தன் மற்றும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் ஆகியோர் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

இந்த ஆய்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ஜா.ஆனி மேரி ஸ்வர்ணா, அரியலூர் சட்டமன்ற உறுப்பினர் கு.சின்னப்பா ஆகியோர் கலந்துகொண்டனர்.

அரியலூர் மாவட்டத்தில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் புலம்பெயரும் நீர்ப்பறவைகளுக்கான, தமிழ்நாட்டிலுள்ள மிக முக்கியமான நன்னீர் ஏரிகளுள் ஒன்றாக விளங்குகிறது. மாநிலத்தின் பெரிய ஏரிகளுள் இதுவும் ஒன்றாக திகழ்கிறது. இச்சிறப்பு மிக்க அரியலூர் வனக்கோட்டத்தின் கட்டுப்பாட்டில் உள்ள கரைவெட்டி பறவைகள் சரணாலயம் மற்றும் அரியலூர் வனச்சரகம், அரியலூர் வனக்கோட்டத்தில் புதிய நாற்றாங்கால் அமைக்கப்பட்டுள்ளதை இன்றையதினம் வனத்துறை அமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா.சி.சிவசங்கர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முன்னதாக அரியலூர் மாவட்டம், வாரணவாசி கிராமத்தில் உள்ள புதை உயிரிப்படிவ அருங்காட்சியகத்தினை வனத்துறை அமைச்சர் டாக்டர் மா. மதிவேந்தன், தமிழ்நாடு அரசு போக்குவரத்துத் துறை அமைச்சர் சா. சி.சிவசங்கர் ஆகியோர் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.


இந்த ஆய்வில் மாவட்ட வருவாய் அலுவலர் மரு.ம. ச.கலைவாணி, முதன்மை தலைமை வனக்காவலர் சென்னை சுபரத் மொஹபத்ரா தலைமை வனக்காவலர் திருச்சி சதிஷ் வருவாய் கோட்டாட்சியர் ராமகிருஷ்ணன், மாவட்ட வன அலுவலர் இளங்கோவன், வனச்சரக அலுவலர் முத்துமணி, மாவட்ட துணை செயலாளர் சி.சந்திரசேக ரன், ஒன்றிய செயலாளர்கள் இரா.கென்னடி, ரெ. அசோகசக்ரவர்த்தி, மாவட்ட பொறியாளர் அணி அமைப்பாளர் கே.சி.ஹூயிகதிரவன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் எஸ்.ஆர். முருகேசன், மாவட்ட பிரதிநிதிகள் மு.முத்தமிழ் செல்வன், ஆர். ஜி. மணிவேல், நெடுஞ்செழியன், மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை துணை தலைவர் மு.பழனிசாமி, மாவட்ட விவசாய அணி துணைத் தலைவர் ரவி, ஒன்றிய துணை செயலாளர்கள் க.ரவி, மனோஜ், ஒன்றிய பொருளாளர் ஆனஸ்ட் அம்பிகாபதி, ஒன்றிய தகவல் தொழில்நுட்ப அமைப்பாளர் டி.எம். அருண், ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஆசை.அன்பு, எல். கே.அருண், மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் உடன் இருந்தனர்.



முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் க.பொன்முடி அவர்களின் வழிகாட்டுதலின்படி, விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றியம், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2022 – 2023 நிதியின் மூலமாக ரூ.7.0 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய நாடக மேடையை விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர் – விழுப்புரம் தெற்கு மாவட்டச் செயலாளர் நா. புகழேந்தி எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். மாவட்ட வருவாய் அலுவலர் பரமேஸ்வரி, கோட்டாட்சியர் பிரவீனா குமாரி, மாவட்ட துணை செயலாளர் தயா. இளந்திரையன், ஒன்றிய குழு தலைவர் சங்கிதாஅரசி ரவிதுரை, பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, ஜெ.ஜெயபால், ஒன்றிய குழு துணை தலைவர் ஜீவிதா ரவி, பேரூராட்சி துணை தலைவர் ச.பாலாஜி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சுமதி, முபாரக் அலி, மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன், ஒன்றிய கவுன்சிலர் அன்பரசி நீதி கோபிநாத், ஊராட்சி மன்ற தலைவர் செல்வி, கிளை செயலாளர்கள் நீதி என்கிற கோபிநாத், குணசேகர், நாவப்பன், பிரபு மற்றும் அரசு அதிகாரிகள், கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## புதுக்கோட்டை க. வீரைய்யா
## செப்டம்பர் 12 (1993)



புதுக்கோட்டை மாவட்டத்தின் கழகத் தூண்களில் ஒருவர்.

நாடாளுமன்ற உறுப்பினராகப் பணியாற்றியவர்.

தி.மு.கழகத்தின் சொத்து பாதுகாப்பு உறுப்பினராகவும், தலைமை நிர்வாகக்குழு உறுப்பினராகவும் பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

## நாடு நன்றாக இருக்க வேண்டும் என்றால் – 2024 நாடாளுமன்றத் தேர்தலில்

# ‘இந்தியா’ கூட்டணி வென்றால்தான் இந்தியாவை காப்பாற்ற முடியும்!

## நெய்வேலி சபா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் காணொலியில் வாழ்த்துரை!

சென்னை, செப். 12-

**நாடு நன்றாக இருக்க வேண்டும் என்றால் 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வென்றால்தான் இந்தியாவை காப்பாற்ற முடியும் என்று நெய்வேலி சபா.ராஜேந்திரன் எம்.எல்.ஏ. இல்ல மணவிழாவில் மணமக்களை வாழ்த்தி காணொலியில் உரையாற்றியபோது முதல்வர் மு.க.ஸ்டாலின் குறிப்பிட்டார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா ராசேந்திரன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் மணமக்களை வாழ்த்தி காணொலிக் காட்சி வாயிலாக ஆற்றிய உரை வருமாறு:-

அன்புச் சகோதரர் சபா. ராசேந்திரன் அவர்கள் தன்னுடைய மகன் திருமணத்தை நடத்தி வைக்க நான் நெய்வேலிக்கு வர வேண்டும் என்று பல மாதங்களுக்கு முன்பே என்னிடம் தேதி வாங்கி மிகப் பெரிய ஏற்பாடுகளை செய்து வந்தார்.



**டெல்லிக்கு செல்லவேண்டிய சூழலை சபா.ராசேந்திரனிடம் தெரிவித்தேன்!**

ஆனாலும், நெய்வேலிக்கு நேரில் வர இயலாத சூழல் ஏற்பட்டு விட்டது. ஜி20 மாநாட்டையொட்டி குடியரசுத் தலைவர் அவர்களது அழைப்பின் பேரில், நேற்று டெல்லி சென்று விட்டேன். இந்தச் செய்தியை சபா. ராசேந்திரன் அவர்களுக்கு நான் தொலைபேசி வாயிலாக தெரிவித்தேன். அவரும் என்னுடைய நிலைமையை புரிந்து கொண்டு, “நீங்கள் போய்விட்டு வாங்கண்ணா” என்று பாசத்தோடு சொன்னார்.

சபா.ராசேந்திரன் அவர்களின் குடும்பமும் என் குடும்பம்தான். அதனாலதான், எனக்குப் பதிலாக, நம்முடைய இளைஞரணிச் செயலாளர், அமைச்சர் தம்பி உதயநிதி கலந்து கொள்வார் என்று அவரிடம் சொன்னேன்.

டெல்லியில் இருந்தாலும், என்னுடைய எண்ணங்கள் எல்லாம் நெய்வேலியில்தான் இருக்கிறது. சபா. இராசேந்திரன் குடும்பம் என்பது வாழையடி வாழையாக கழகக் குடும்பமாக இருந்து வருகின்ற குடும்பம். இனியும் அப்படித்தான் தொடரப் போகிறது. நமது சபா. ராசேந்திரன் அவர்களது தந்தை சபாபதி அவர்கள் மூன்று முறை சொரத்தூர் ஊராட்சி மன்றத் தலைவராக இருந்தவர். நமது சபா.ராசேந்திரன் மூன்று முறை சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணி ஆற்றி வருகிறார். கல்லூரியில் படிக்கிற காலத்திலேயே கழகப் பணியாற்றுவதில் ஈடுபாடு கொண்டவர் சபா. ராசேந்திரன்.

**மூன்று முறை வென்று மக்கள் செல்வாக்கை பெற்ற சபா.ராசேந்திரன்!**

1996ஆம் ஆண்டு சொரத்தூர் ஊராட்சி மன்றத் தலைவர் - 2003-ஆம் ஆண்டு பண்ருட்டி ஒன்றியக் கழகச் செயலாளர் - 2006-ஆம் ஆண்டு நெல்லிக்குப்பம் சட்டமன்ற உறுப்பினர் - இப்படி படிப்படியாக உயர்ந்தவர். நான்கு முறை போட்டியிட்டு - மூன்று முறை வென்றவர் என்பதை வைத்தே மக்களிடம் அவருக்கு இருக்கின்ற செல்வாக்கை தெரிந்து கொள்ளலாம்.

தனது தொகுதிக்குத் தேவையான திட்டங்களை கேட்டுப் பெறுவதில், சபா. ராசேந்திரன் எப்போதுமே கண்ணும் கருத்துமாக இருப்பார். இது என்னை விட நெய்வேலி தொகுதி மக்களுக்கு நன்றாகவே தெரிந்திருக்கும். தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது, நெல்லிக்குப்பம் தொகுதிக்கு உட்பட்ட மலட்டாறு திட்டத்தை நிறைவேற்ற வைத்தார். இதனால், அந்தச் சுற்றுவட்டாரத்தில் இருந்த நாற்பதுக்கும் மேற்பட்ட கிராமங்களின் நிலத்தடி நீர் மட்டம் உயர்ந்துள்ளது.

நெல்லிக்குப்பம் புதிய பேருந்து நிலையத்தை - துணை முதலமைச்சராக இருந்தபோது நானே நேரில் வந்து திறந்து வைத்தேன். அதுமட்டுமல்ல, தனது சொந்த நிதியில், காசாம்பு ஏரியை தூர்வாறினார். அதை நேரில் சென்று நான் பார்வையிட்டது இப்போதும் என் நினைவில் பசுமையாக இருக்கிறது.

**நெய்வேலி தொகுதிக்கு ஏராளமான திட்டங்களைப் பெற்றவர்!**

இப்போது 2021-ல் நாம் ஆட்சிக்கு வந்த பிறகு - காடாம்புலியூர் சிட்கோ சிறு தொழில் வளாகம் கட்டப்பட்டு, மூன்று மாதம் முன்புதான் திறந்து வைத்தேன். நெய்வேலியில் நகர்ப்புற திட்டத்தின்கீழ் 840 வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. இன்னும் ஏராளமான திட்டங்களை தன்னுடைய தொகுதிக்கு கொண்டு வர வேண்டும், மக்கள் தேவைகளை தீர்க்க வேண்டும் என்று முனைப்பாக இருக்ககூடியவர்தான் ராசேந்திரன் அவர்கள். நெய்வேலி நிறுவனத்துக்கும் தொழிலாளர்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருந்து பேச்சுவார்த்தைகளை சுமுகமாக முடிப்பவராகவும் ராசேந்திரன் செயல்பட்டு வருகிறார்.

இதை எல்லாம் பார்க்கும்போது, சபா ராசேந்திரனை - சபாஷ் ராசேந்திரன் என்று சொல்லத் தோன்றுகிறது. அந்தளவுக்கு சிறப்பாக செயல்பட்டு வரும் சபா ராசேந்திரன் இல்லத் திருமண விழாவிற்கு என்னுடைய மனமார்ந்த வாழ்த்துகளை தெரிவித்து கொள்கிறேன்.

சபா. ராசேந்திரன் - அங்கயற்கண்ணி இணையரின் அன்பு மகனான சபா. இரா. சுமந்த் B.E., அவர்களும், சாரங்கபாணி - செல்வராணி இணையரின் அன்பு மகள் சா. தனரஞ்சனி B.Tech., அவர்களும் – வாழ்வில் அனைத்து இன்பங்களையும் பெற்று - அனைத்து உயர்வுகளையும் அடைந்து வாழ் வாங்குவாழவேண்டும்என்று வாழ்த்துகிறேன்.

**மக்கள் தேவைகளை தீர்க்க வேண்டும் என்று முனைப்பாக இருக்கக் கூடியவர்தான் ராசேந்திரன் அவர்கள். நெய்வேலி நிறுவனத்துக்கும் தொழிலாளர்களுக்கும் அரசுக்கும் பாலமாக இருந்து பேச்சுவார்த்தைகளை சுமுகமாக முடிப்பவராகவும் ராசேந்திரன் செயல்பட்டு வருகிறார். இதை எல்லாம் பார்க்கும்போது, சபா ராசேந்திரனை - சபாஷ் ராசேந்திரன் என்று சொல்லத் தோன்றுகிறது.**

**திருமண விழாக்களில் நான் வைக்கும் இரண்டு கோரிக்கை!**

பொதுவாக, திருமண விழாக்களில் கலந்து கொள்ளும்போது, என்னோட பேச்சின் இறுதியில், நான் ரெண்டு கோரிக்கைகள் வைப்பேன். மணமக்கள் தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்குத் தமிழிலேயே பெயர் வைக்க வேண்டும் என்கிற முதல் கோரிக்கை.

ராசேந்திரன் இல்லத் திருமண விழாவிலே நான் அந்தக் கோரிக்கையை வைக்க வேண்டிய அவசியம் இல்லை என்று நினைக்கிறேன். கண்டிப்பாக தமிழில்தான் பெயர் வைப்பீர்கள் என்று நான் நம்புகிறேன்.

அதேபோல, இன்னொரு கோரிக்கை என்னவென்றால், மணமக்கள் வீட்டுக்கு விளக்காக, நாட்டுக்குத் தொண்டர்களாக விளங்க வேண்டும் என்று சொல்வேன். நம்முடைய வீடு மட்டும் அல்ல, நாடும் நன்றாக இருக்க வேண்டும். அதற்காகவும் பங்களிக்க வேண்டும் என்று சொல்வேன்.

**40 தொகுதிகளிலும் நாம் முழு வெற்றி பெற்றாக வேண்டும்!**

நம்முடைய நாடு நன்றாக இருக்க வேண்டும் என்றால், 2024 நாடாளுமன்றத் தேர்தலில் ‘இந்தியா’ கூட்டணி வெற்றி பெற வேண்டும். இந்தியா கூட்டணி வெற்றி பெற்றால்தான் இந்தியாவையே காப்பாற்ற முடியும்.

ஆகவே, வரும் நாடாளுமன்றத் தேர்தலில் தமிழ்நாடு, புதுவையில் இருக்கிற 40 தொகுதிகளிலும் நாம் ஜெயித்தாக வேண்டும். அப்படி முழு வெற்றியை பெற்றால்தான் அடுத்து அமையப்போகிற ஒன்றிய ஆட்சியிலும் நாம் முக்கியப் பங்காற்ற முடியும்.

நாம் எல்லோரும் சேர்ந்து உழைக்க இந்தத் திருமண விழாவில் உறுதி எடுத்துக் கொண்டு, “நாற்பதும் நமதே நாடும் நமதே” என்ற முழக்கத்துடன் விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டுள்ளார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.09.2023) செங்கல்பட்டு மாவட்டம், மாமல்லபுரத்தில் நடைபெற்ற கழக தலைமை பொதுக்குழு உறுப்பினர் மேடவாக்கம் ப.ரவி இல்ல திருமண வரவேற்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு மணமக்கள் டி.ராஜராஜன் – டாக்டர் அ.வைஷ்ணவி ஆகியோரை மரக்கன்று பசுமைக்கூடை வழங்கி வாழ்த்தினார். திருமதி துர்கா ஸ்டாலின் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், தாம்பரம் மாநகராட்சி துணை மேயர் ஜி.காமராஜ் மற்றும் மணமக்களின் குடும்பத்தினர் உடனிருந்தனர்.



நெய்வேலியில், கழக சட்டமன்ற உறுப்பினர் சபா ராஜேந்திரன் புதல்வர் சபா.இரா.சுமந்த் சா.தனரஞ்சனி ஆகியோரின் சுயமரியாதை திருமணத்தை நேற்று முன்தினம் (10.9.2023) கழக இளைஞர் அணிச் செயலாளரும், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தினார். இதில் அமைச்சர்கள் முனைவர் க.பொன்முடி, சி.வெ.கணேசன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி தலைவர் கே.எஸ். அழகிரி, புதுவை முன்னாள் முதல்வர் நாராயணசாமி, தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன், திராவிட இயக்கத் தமிழர் பேரவை பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப.வீரபாண்டியன் மற்றும் கழக முன்னோடிகள் ஏராளமானோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்தினர்.

## இராமநாதபுரம் பரமக்குடியில்

# தியாகி இம்மானுவேல் சேகரனாருக்கு - சிலை - மணிமண்டபம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, செப். 12-

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடியில் திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழ்நாடு அரசின் சார்பில் அமைக்கப்படும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவிப்பு வெளியிட்டுள்ளார்.

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் அமைக்கப்பட வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இருந்தது. இந்நிலையில் தேவேந்திர குல வேளாளர் கல்வியாளர் குழு, தேவேந்திரர் பண்பாட்டுக் கழகம், திரு.இம்மானுவேல் சேகரனாரின் மகள் திருமதி.சூரிய சுந்தரி பிரபாராணி மற்றும் அன்னாரது பேரன் சக்கரவர்த்தி ஆகியோர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேரில் சந்தித்து இக்கோரிக்கையினை வலியுறுத்தினர்.

தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்கள் 1924ஆம் ஆண்டு அக்டோபர் 9 அன்று பிறந்தார். இவரது சொந்த ஊர் முதுகுளத்தூர் வட்டம், செல்லூர் கிராமம் ஆகும்.

இவர் 1942இல் ஆங்கிலேயர்களுக்கு எதிராக வெள்ளையனே வெளியேறு இயக்கத்தில் கலந்து கொண்டு சிறைவாசம் சென்றார். மேலும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காகவும் போராடியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் பொதுமக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை நிறைவேற்றிடும் வகையில், தியாகி இம்மானுவேல் சேகரனார் அவர்களின் சமூக பங்களிப்பினைப் போற்றும் வகையில் அவரது பிறந்தநாள் நூற்றாண்டினையொட்டி அன்னார் நல்லடக்கம் செய்யப்பட்ட இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் சுமார் ரூபாய் 3 கோடி மதிப்பீட்டில் திரு. இம்மானுவேல் சேகரனார் அவர்களுக்கு திருவுருவச் சிலையுடன் கூடிய மணிமண்டபம் தமிழ்நாடு அரசின் சார்பில் கட்டப்படும்.

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

## மயிலம் ஒன்றியம் கொள்ளார் ஊராட்சியில் ரூ.21.38 லட்சத்தில்

# குளம் புனரமைப்பு - சிமெண்ட் சாலை அமைக்கும் பணி!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் தொடங்கி வைத்தார்!

திண்டிவனம், செப். 12-

விழுப்புரம் மாவட்டம் மைலம் ஒன்றியம் கொள்ளார்ஊராட்சியில் ஊரக வளர்ச்சி துறை சார்பில் அண்ணா மறுமலர்ச்சி திட்டத்தின் கீழ் 11 லட்சத்து 40 ஆயிரம் மதிப்பீட்டில் குளம் புனரமைக்கும் பணியும் 7 லட்சத்து 98 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் சாலை அமைப்பதற்கு அடிக்கல் நாட்டு விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மைலம் ஒன்றிய பெருந்தலைவர் யோகேஸ்வரி மணிமாறன் தலைமை தாங்கினார். ஊராட்சி மன்றத் தலைவர் புண்ணியமூர்த்தி அனைவரையும் வரவேற்றார். நிகழ்ச்சியில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத் துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு ரூபாய் 21 லட்சத்து 38 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் குளம் புனரமைக்கும் பணிக்கும் புதிய சிமெண்ட் சாலை அமைப்பதற்கும் அடிக்கல் நாட்டி பணியை தொடங்கி வைத்தார்.

நிகழ்ச்சியில் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, அவைத் தலைவர் டாக்டர் சேகர், மயிலம் வடக்கு ஒன்றியச் செயலாளர் மணிமாறன், மாவட்டக் கவுன்சிலர் மகேஸ்வரி குமரேசன், திண்டிவனம் நகரச் செயலாளர் கண்ணன், ஒன்றியக் கவுன்சிலர்கள் உமா ஞானசேகர், அ சரசு முருகன், பரிதா சம் சுதீன். சாந்தகுமார் ,கீதா சிவகுமார், நிர்வாகிகள் முனியாண்டி, வீராசாமி , ஆறுமுகம், சேகர், தெய்வ கண்ணன், செல்வகுமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## பிரதமர் மோடி மீது காங். தாக்கு

# ஏழைகளை வெறுப்பதால் குடிசைகளை மறைக்கிறார்!

## ஜி-20 ஏற்பாடு குறித்து விமர்சனம்!

புதுடெல்லி, ஏப்.12 -

ஜி20 மாநாட்டிற்கு வரும் உலக தலைவர்கள் கண்ணில் படாமல் இருப்பற்தாக ஏழைகளின் குடிசைப் பகுதிகளை துணியால் மூடி மறைத்த பிரதமர் மோடி, ஏழைகளை வெறுக்கிறார் என காங்கிரஸ் விமர்சித்துள்ளது.

ஜி20 மாநாட்டிற்காக பல உலகத் தலைவர்கள் வந்துள்ள நிலையில், டெல்லியில் சில இடங்களில் சாலையோரம் உள்ள குடிசை பகுதிகள் பச்சை துணியால் மூடி மறைக்கப்பட்டுள்ளன. மேலும், தெருவில் சுற்றித் திரிந்த பல தெரு நாய்கள் பிடித்துக் கொண்டு செல்லப்பட்டுள்ளன. பா.ஜ.க. அரசின் இந்த நடவடிக்கையை காங்கிரஸ் கடுமையாக விமர்சித்துள்ளது.

காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி தனது டிவிட்டரில், “ஒன்றிய அரசு நமது ஏழை மக்களையும், விலங்குகளையும் மறைக்கிறது. இந்தியாவின் யதார்த்தத்தை நமது விருந்தினர்களிடமிருந்து மறைக்க வேண்டிய அவசியமில்லை” என கூறியுள்ளார்.

காங்கிரசின் அதிகாரப்பூர்வ டிவிட்டர் தளத்தில் பதிவிடப்பட்டுள்ள வீடியோ ஒன்றில், குடிசைப் பகுதிகள் பச்சை துணியால் மூடப்பட்டிருப்பதும், தெரு நாய்கள் கொடூரமாக பிடித்து செல்லப்படுவதையும் காட்டுகிறது. அதில் குடிசைவாசிகள் பேசுகையில், “எங்களை அரசு பூச்சிகளாக கருதுகிறது. நாங்களும் மனுசங்க இல்லையா?” என கேள்வி கேட்கின்றனர்.

இந்த வீடியோவுடன் காங்கிரஸ் கட்சி, “ஜி20 மாநாட்டிற்கு முன்பாக, அனைத்து குடிசை பகுதிகளையும் மூடி, மோடி அரசு தனது தோல்வியை மறைக்கிறது. ஏனெனில் மன்னர் ஏழைகளை வெறுக்கிறார். நாய்கள் கழுத்தில் இறுக்கப்பட்டு, குச்சிகளால் அடித்து கூண்டுகளில் வீசப்படுகின்றன. அவைகளுக்கு உணவு, தண்ணீர் மறுக்கப்படுகிறது. இது போன்ற கொடூரமான செயல்களுக்கு எதிராக நாம் குரல் எழுப்புவதும், குரலற்ற பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கோருவதும் அவசியம்” என்று பதிவிட்டுள்ளது.




# கலைஞர் என்கிற ஈர்ப்பு விசை!

■ நீரை.மகேந்திரன்

கலைஞர் நூற்றாண்டில் அவரைக் குறித்து அறிந்து கொள்வதில், புதிய ஆர்வத்தின் அலைகளைக் கவனிக்க முடிகிறது. கலைஞரை அறிந்துகொள்ள வேண்டுமெனில், கடந்த 80 ஆண்டுகால வரலாற்றை அவரே எழுதி வைத்துச் சென்றுள்ளார். எனினும், அவர் எழுதி வைக்காதவற்றின் அடுக்குகள் இன்னும் ஆழமும், அர்த்தமும் கொண்டவையாக உள்ளன.

கலைஞரை இப்போதுதான் முதல்முறையாக அறியும் தலைமுறைக்கு, தமிழ் நிலத்துக்கு அவர் செய்த அளப்பரியா அறிவு முதலீடுகளையும், நீண்ட காலச் சிந்தனைச் செல்வங்களையும் கொண்டு சேர்க்க வேண்டியது காலத்தின் தேவையாக உள்ளது. கலைஞரை ஓரளவு அறிந்து வைத்திருப்பவர்களும் அவரின் ஆளுமை நுட்பத்தினை அறிந்துகொள்ள வேண்டியது அவசியமெனச் சொல்லலாம்.

## எந்த முனையில் இருந்தும் கலைஞர்…

ஆனால், இப்போது கலைஞரை எங்கிருந்து அறிந்து கொள்வது அல்லது அறிமுகப்படுத்துவது என்கிற கேள்விக்கு எந்த சிரமத்தையும் கலைஞர் அளிக்கவில்லை. அவரை எந்த முனையில் இருந்தும் அறிந்து கொள்வதற்கான வாய்ப்புகளை அவர் திறந்துவிட்டுள்ளார்.

மார்க்சியத் தலைவர்களை அறிந்து கொள்ள வேண்டுமெனில், அந்தத் தத்துவத்தின் அடிப்படையைப் புரிந்து கொள்ள வேண்டும். குறைந்தபட்சம் ராகுல சாங்கிருத்தியாயன் எழுதிய **‘பொதுவுடமை தான் என்ன?’** என்கிற நூலை வாசித்தால், ஓரளவு அந்தத் தலைவர்களின் வாழ்க்கை புரியும். இல்லையெனில், வெறும் சாகசத் தலைவர்களாக மட்டுமே எஞ்சுவர்.

அண்ணல் அம்பேத்கரின் சிந்தனையை அறிய, பல தொகுப்புகள் இருந்தாலும் **‘நான் ஓர் இந்துவாக சாக மாட்டேன்’** என்கிற சிறு நூலை வாசிப்பவர்களுக்கு அவரின் சிந்தனைச் சாரம் விளங்கும்.

தந்தை பெரியாரையும், பேரறிஞர் அண்ணாவையும் அவர்களின் களப் போராட்டங்கள், புரட்சிகரமான மேடை முழக்கங்களை அறிய வேண்டியது அவசியமாகும். அதாவது நேரடியான அரசியல் அணுகுமுறைகள் மட்டுமே அந்தத் தலைவர்களை நோக்கிச் செல்வதற்கான வழிகளாக உள்ளன.

இந்த இடத்தில்தான் கலைஞர் வேறுபடுகிறார். அவரை அணுகுவதற்கு ஒரே நேர்க்கோட்டிலான பாதை என்ற கட்டுப்பாடு எதுவும் இல்லை. கலைஞரை எந்தத் திசையில் இருந்தும், எந்தத் துறையில் இருந்தும் அணுகிவிட முடிகிறது. மருத்துவம், பொறியியல் தவிர்த்து மற்ற துறைகளில் எல்லாம் அவர் உச்சம்தொட்ட ஆளுமையாகத் திகழ்ந்துள்ளார். அவர் ஈடுபடாத அந்த இரண்டு துறைகளிலும், அவரது நிர்வாகத் திறன் அவற்றின்மீது ஆளுமை செலுத்தியதையும் தவிர்க்க முடியாது.

## அரசியல் ஆர்வத்தின் காலம்

சாதாரணமாக நமது சமூகத்தில் அரசியல் ஆர்வம்கொள்ளும் வயது, அல்லது சமூகத்தைக் கவனிக்கத் தொடங்கும் வயது எனில், அது பள்ளிப் பருவம் எனலாம். கல்லூரிக் காலத்தில் அரசியலில் அவர்கள் ஆழ்ந்து செல்லக்கூடும். ஆனால், அதற்கு முன்னரான காலத்தில் குறைந்தபட்சமாக அரசியல் தலைவர்கள் குறித்த அறிமுகம் ஏற்படும். அந்த வகையில், கலைஞரை ஏதாவது ஒரு வகையில் பள்ளிப் பருவத்திலேயே அறிந்து கொண்ட தலைமுறை இருந்தது. எழுத்திலும் பேச்சிலும் திரைத்துறையிலும் என அவரது ஆளுமை கவனத்துக்கு வந்து கொண்டே இருக்கும்.

திரைத் துறையில் ஆர்வம் கொண்ட ஓர் இளைஞனோ, இளைஞியோ தனது பயணத்தின் தொடக்கத்திலேயே கலைஞரைச் சந்திக்காமல் இருக்க முடியாது. வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்களுக்குத் தமிழ் நிலத்தின் கடந்த நூறு ஆண்டுகளின் வரலாற்றை அறிய **‘நெஞ்சுக்கு நீதி’**, **‘கலைஞர் கடிதங்கள்’** ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இலக்கிய வாசகனுக்கு அவரது ‘குறளோவியம்’, ‘தொல்காப்பியப் பூங்கா’, ‘திருக்குறள் உரை’ ஆகிய வகைகள் உள்ளன. பேச்சிலும் அவர் கட்டிப் போட்டவர். ‘என் உயிரினும் மேலான உடன்பிறப்புகளே’ என அவர் உச்சரிக்கும்போது ஆர்ப்பரித்த உடன்பிறப்புகளை அறிவோம்.

> **வரலாற்றில் ஆர்வம் கொண்டவர்களுக்குத் தமிழ் நிலத்தின் கடந்த நூறு ஆண்டுகளின் வரலாற்றை அறிய ‘நெஞ்சுக்கு நீதி’, ‘கலைஞர் கடிதங்கள்’ ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.**

சரி, இப்போது கலைஞரை எப்படி உயிரோட்டமாக வைத்துக் கொள்வது, இளையோருக்குக் கொண்டு செல்வது என்கிற கேள்விக்கு அவர் திறந்து வைத்துள்ள வாசல்களையே பயன்படுத்தலாம்.

## நிதானமும் வேகமும்

இன்றைக்கு இருக்கும் முக்கிய ஆளுமைகள் எல்லோருக்குமே, அவர்களது இளம் வயதிலேயே அறிமுகம் ஆகி இருக்கிறார் கலைஞர். அது ‘பராசக்தி’யாக, ‘மனோகரா’வாக இருக்கிறது. இன்னும் சிலருக்கு அண்ணா மறைவின்போது வாசித்த ‘கவிதாஞ்சலி’யாக நினைவில் இருக்கலாம். ஆட்சி அதிகாரமாகவும், சமூக நீதிச் சட்டங்களாகவும் அவர் மக்கள் மத்தியில் சென்றுள்ளார்.

‘பள்ளியில் சேர்வதற்காக, திருவாரூர் குளத்தில் விழுவேன்’ என நின்ற சிறு வயது முதலே, அவருடைய தன்முனைப்பும், விடாமுயற்சியும் அவரது இறுதிக் காலம் வரை தொடர்ந்தது. நமது எண்ணங்கள் நிறையவும் அதுவே காரணமாக இருந்துள்ளது.

அவரை அறிந்து கொள்ள வேண்டியதில் ஆட்சி அதிகாரத்துக்கு முன், ஆட்சி அதிகாரத்துக்குப் பின் என இரண்டு காலகட்டங்களாகவும் பிரிக்கலாம். ஆனால், இரண்டு கட்டங்களிலும் அவரது நிதானமும், வேகமும் நுட்பமான புரிதலைக் கேட்பவை. சமூகநீதிக் களத்தில் இளவயதில் நின்ற காலத்திலும் சரி, ஐந்து முறை முதல்வராக இருந்தபோதும் சரி அவர் நிதானித்துச் செயல்படும்விதம், நீண்ட கால நோக்கங்களைக் கொண்டது.

ஆட்சி அதிகாரம் வந்ததும் உடனடியாகத் தலைகீழ் மாற்றம் என அறிவித்துவிடவில்லை. ஆட்சியில் அதிகாரத்தை மிக வலுவாக ஊன்ற களத்தைத் தயார்ப்படுத்தினார் என்று சொல்லலாம். கழகத்தின் கையில் ஆட்சி வந்தது, தமிழ்நாடு பெயர் மாற்றம், சுயமரியாதைத் திருமணச் சட்டம் என அடுத்தடுத்து அண்ணா நிகழ்த்திக் காட்டினார். ஆனால், இதன் எதிர்வினைகள் சாதாரணமானவை அல்ல. இதுபோன்று, கொள்கைகளைச் சட்டமாக்கும் விவகாரங்களில் மிக நுட்பமாக ஆட்சியைக் கையாண்டுள்ளார். கலைஞர் தனது முதல் ஆட்சியின்போது கொள்கை சார்ந்தவற்றைச் செயல்படுத்தியதைவிட, வளர்ச்சி சார்ந்தவற்றுக்கு முக்கியத்துவம் அளித்துள்ளார்.

தொழில்துறைகளில் ஏற்படும் மாற்றம், வேலைவாய்ப்புகள் உருவாக்கம் ஆகியவை மக்களின் தன்னிறைவு வாழ்க்கைக்கு அடிப்படை என்பதால், அதற்கான வேலைகளை முதல் ஆட்சிக் காலத்திலேயே தொடங்குகிறார். தொழிற்பேட்டைகள், நதிநீர்த் திட்டங்கள், முதலீட்டுத் திட்டங்கள், மேம்பாலக் கட்டமைப்பு ஆகியவற்றை உருவாக்கிய ஆண்டுகளாக 1969 முதல் 1975 ஆண்டுகளைப் பார்க்கலாம். கெடுவாய்ப்பாக, பெண்களுக்கான சொத்துரிமை உள்ளிட்ட சமூகச் சீர்திருத்தப் பணிகளுக்கு அவர் கொஞ்ச காலம் காத்திருக்க வேண்டி இருந்தது. ஆனால், வெற்றி தோல்விகள் குறித்து அவருக்கு எந்தக் காலத்திலும் பெரிதாக எதிர்பார்ப்புகள் இருந்ததில்லை. வெற்றி கிடைத்தால், அதன் மூலம் சட்டங்களாகவும், திட்டங்களாகவும் அவரது கையெழுத்துகள் அமைந்தன. தோல்வி எனில், அந்தக் காலகட்டத்தில் ஆட்சியில் இருப்பவர்களை முடுக்கிவிடும் சாட்டைக் குச்சியாக இருந்துள்ளதை மறுக்க முடியாது.

ஆட்சி அதிகாரம், அரசியல், எழுத்து, பேச்சு என எல்லா பணிகளிலும் அவருக்கெனத் தனிப் பாணி உண்டு. எந்த ஒரு பாணியையும் பின்பற்றாமல் தனக்கான ஒரு தனிப் பாதையை வகுத்துக் காட்டியவர் அவர். அதுதான் அவரிடத்தில் மக்களை ஈர்க்கிறது. தலைமுறைகள் கடந்தும் அந்த ஈர்ப்பு விசை, ஆற்றல் கொண்டதாகத் திகழும்.

---

## :ப்ளாஷ்பேக்





### யானையை வைத்து வரவேற்பு!



எழில்அரசு

ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டம், வலங்கைமான் ஒன்றியத்தில், என் தாய் தந்தை, இராணி- சிவப்பிரகாசம் ஆகியோரின் திருமணம் தலைவர் கலைஞர் தலைமையில் 1975 -ஆம் ஆண்டு மே மாதம் நடைபெற்றது. வலங்கைமான் முருகன் திரையரங்கில், பெரிய அளவில், சடங்குகளற்ற சுயமரியாதைத் திருமணம், தலைவர் தலைமையில் சிறப்பான முறையில் நடந்தேறியதை என் தந்தை என்னிடம் அடிக்கடி கூறுவார். தலைவர் கலைஞருக்கு யானையை வைத்து மாலை அணிவித்துச் சிறப்பான வரவேற்பும் அளிக்கப்பட்டிருக்கிறது. ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டச் செயலாளர் மன்னை ப.நாராயணசாமி அவர்களும் என் தாத்தா அன்றைய ஒன்றியச் செயலாளர் ‘வட்டம்’ நா.சாமிநாதன் அவர்களும் இத்திருமணத்தின்போது உடனிருந்தனர். தஞ்சைப் பகுதியில் திரையரங்கில் நடைபெற்ற முதல் சுயமரியாதைத் திருமணம் இதுதான்.

**-சி.எழில்அரசு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர் சங்கம், தஞ்சை மண்டல துணைத் தலைவர், தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை-600 018. வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

---

## கருவூலம் — மழை, சகதியிலும் மாநாடு!

**1978-ஆம் ஆண்டு, டிசம்பர் மாதம் 23, 24 தேதிகளில் திருச்சியில் கழகத்தின் சார்பில், மாபெரும் இந்தி எதிர்ப்பு மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டுக்கு முன்னாள் சட்டப்பேரவைத் தலைவர் புலவர் கோவிந்தன் தலைமை ஏற்றார். மாநாட்டுத் திறப்பாளர் கழகத்தின் சார்பில், நாடாளுமன்ற உறுப்பினராக இருந்த வை.கோ. மாநாட்டின் இரண்டாம் நாள் மழை பெய்து, மாநாட்டுத் திடல் முழுவதும் சகதி ஆனது. ஆனாலும், மழையில் நனைந்துகொண்டே தலைவர்களின் உணர்ச்சிமிக்க உரைகளை மக்கள் கேட்டனர்.**

---

## திராவிட இயக்க இதழ்கள் - ‘நம் நாடு’

தி.மு.க.வின் அதிகாரப்பூர்வ நாளேடாக 1953-ஆம் ஆண்டு முதல் 1972-ஆம் ஆண்டு வரை வெளிவந்தது **‘நம்நாடு’** இதழ். இந்த இதழுக்கு முதலில் பேரறிஞர் அண்ணாவும், பிறகு முத்தமிழறிஞர் கலைஞர், நாவலர் நெடுஞ் செழியன், சி.பி.சிற்றரசு, இரா.செழியன் போன்றவர்களும் ஆசிரியர்களாக இருந்துள்ளனர்.



‘நம்நாடு’, மாலைப் பதிப்பாக வெளிவந்து கொண்டிருந்தது. அதுவும் சிறிய அளவில் வெளியிடப்பட்டு வந்தது. அந்த இதழின் வளர்ச்சி குறித்து ‘முரசொலி’ வார ஏடாக இருந்தபோது, ‘நம்நாடு நமது ஏடு’ எனும் தலையங்கம் எழுதி, அந்த இதழின் அவசியத்தை வலியுறுத்தி இருந்தது.

அந்த இதழை மீண்டும் 1978-இல் கலைஞர் அவர்கள் தி.மு.க.வின் வார ஏடு என அதிகாரப்பூர்வமாக அறிவித்தார். 1979-ஆம் ஆண்டு வரை அந்த வார இதழ் வெளிவந்தது. அதற்கு கலைஞரே ஆசிரியராக இருந்தார்.

நாளிதழாக இருந்தபோது 4 பக்கங்களுடனும், வார இதழாக வந்தபோது 12 பக்கங்களுடனும் வெளிவந்தது. தொடக்கத்தில், இதழின் பெயருக்குக் கீழே, ‘The Official Organ of D.P.F.’ என்று அச்சிடப்பட்டு வந்தது. திராவிட முன்னேற்றக் கழகம் என்ற சொற்கள் ஆங்கிலத்தில் பொருள்படும்படி Dravidian Progressive Federation (DPF) என்று குறிப்பிடப்பட்டுள்ளன. பின்னாளில் அது ‘The Official Organ of D.M.K’ என்று குறிப்பிடப்பட்டு வந்தது.

---

## சோதிடந்தனை இகழ்!

ஜாதி எதிர்ப்பாளராகவும், மதம், கடவுள்மறுப்பு பகுத்தறிவாளராகவும் திரைப்படக்காரராகவும் இருந்தவர், சாகும் வயதில்லைதான். செத்துவிட்டார் இப்ப என்ன? பகுத்தறிவாளர்களுக்கு சாவே வராது என்றெல்லாம் புத்தர் தொடங்கி, எந்தப் பகுத்தறிவுவாதியும் இயற்கைக்கு சவால்விட்டு வாழ விரும்பியதுமில்லை. அப்படியான வாய்ச்சவடால்கள் அடித்ததுமில்லை.

அற்ப முட்டாள்கள் முக்கால் கிலோ மூளையை ஜாதிவெறிக்கும் மூடநம்பிக்கைக்கும் அஞ்சி நடுங்கி பயன்படுத்தாமலே செத்துப் போகக்கூடியவை சில, அவர் ஜோசியத்தைப் பழித்ததனால் சீக்கிரம் செத்தார் எனக் கெக்கலிக்கொட்டுகின்றன.

‘சோதிடந்தனை இகழ்’ என ஆத்திச்சூடி எழுதிவைத்து அதை இயக்கமாக நடத்திய மண் இது.

இளங்கோதான் அரசனாவான் என்கிற அரண்மனை சோதிடத்தைப் பொய்யாக்கி, புலவனாகி அம்பெரும் காப்பியங்களிளொன்றை தந்துவிட்டு துறவியானவனின் வரலாறுகொண்ட மொழிபூமி இது.


மாரிமுத்துவை ‘பரியேறும் பெருமாள்’ வந்தகாலத்திலிருந்து கவனித்து வந்திருக்கிறேன் அந்தப் படத்தைச் சொந்தப் படம்போல ஆதரித்து விவாதித்து வந்ததைப் பல நேர்காணல்களிலும், ஒரு முறை மாரிசெல்வராஜோடு நேரிலும் கண்டுள்ளேன். அண்மைக் காலக் கலைத்துறையின் இழப்பு ஒன்றை தமிழகத்தின் மிக முக்கிய இழப்பாக உணர்ந்து மக்கள் இரங்கல் குறிப்புகளாய் வரைந்து குவிக்கின்றனர். பக்தர்களாய் இருப்பவர்கள் பலநேரங்களில் தங்களால் இயலாததைப் பகுத்தறிவாளர்கள் சமூக அக்கறையோடு செய்யும்போது ரசிப்பார்கள் நேசிப்பார்கள்.

தமிழகத்திற்கேயான தனித்துவப் பண்பு அது.

**-கருப்பு நீலகண்டன் ஃபேஸ்புக் பதிவு**

---

## திராவிடத்தால் வாழ்கிறோம் 238




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/21 - 23 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/21-23. Phone : 28179191, 28179131